மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

இல்லம் : 10 சுற்றம் : 8 / ஆகஸ்ட் 2020 / ஆசிரியர் : விசவனூர் **வே.தளபதி** / விலை : ரூ.10/-



## புதிய கல்விக் கொள்கை மாணவர் விரோதக் கருத்துகள்



அம்மா எனும் அக்காவிற்கு வீரவணக்கம்!



போலியான ஜனநாயகம்


வலைத் தளத்தில்
வாழ்வியல்
சொல்லும்
களம்...
பாருங்கள்!
முற்றம்
MUTRAM TV
இணைய தொலைக்காட்சி

மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

Mutram monthly August 2020

ஆசிரியர்
**விசவனூர் வே.தளபதி**
இணை ஆசிரியர்
பேராசிரியர் **அப்பாத்துரை**
துணை ஆசிரியர்
**இமயவரம்பன்** பி.எஸ்சி.,எம் .ஏ.,பி.எல்.,
உதவி ஆசிரியர்கள்
**ஜெ. ராஜாசிங்,**
**ஆரோக்கிய சார்லஸ்**
தலைமைச் செய்தியாளர்கள்
**வே. வளையாபதி**
**த. ஞானமணி** பி.எஸ்.சி., பி. எட்.,
செய்தியாளர்கள்
**பொன்முடி** சிவகங்கை
**சைதை மணிமாறன்**
**செபாஸ்டின்** திருச்சி
**ஜான் ஜெயராமன்**
**சாதிக்பாட்சா**
**மு.கலைச்செல்வன்**
**ஆ.சிரோன்மணி**
**முருகன் தேவேந்திரன்**
**ஜான்ஜெனோவா ஜெர்லின்** திருச்சி
**ராஜா சாக்ரட்டீஸ்**

நிர்வாகம்
**மணிகண்டன்**
வடிவமைப்பு
**எழில் வரைகலை**
புகைப்படக்காரர்
**ஆபிரகாம் லிங்கன்**

அலுவலக முகவரி
எண் 124, சுப.வீ. தெரு, (என்.டி.ஆர். தெரு),
ரங்கராஜபுரம்,கோடம்பாக்கம், சென்னை- 24
பேச: 8056281973, 044 42154408.
மின்னஞ்சல்: mutram2010@gmail.com
இணைய தளம் : **www.mutram.in**

MUTRAM
Indian Bank Account No,CA 920493454.
IFSC : IDIB000KI41
Rangarajapuram branch. Kodambakkam, chennai

# உள்ளே

அறம் தவறும் ஆட்சி
*- தலையங்கம்*........................................ 4

நாடகக் கொட்டாய் முதல்
சினிமாக் கொட்டாய் வரை (6)
*- பூவைதயா*........................................ 5

விடைபெறுகிறேன் நன்றி !
நியூஸ்18 குணசேகரன்........................................ 7

கவிதைகள்........................................ 10

முதலாளித்துவம் - கேள்வி பதில்........................................ 11

புதிய கல்விக் கொள்கை மாணவர் விரோதக் கருத்துகள்
*பேரா. அ. இராமசாமி*........................................ 13

அக்கா எனும் அம்மாவுக்கு வீரவணக்கம்
*- தொல் திருமாவளவன்*........................................ 15

போலியான ஜனநாயகம்
- வழக்கறிஞர் வேயுறுதோளிபங்கன்........................................ 17

பிரசாத் பூஷண் மீதான வழக்கு
*- சாவித்திரி கண்ணன்* ........................................20

பித்தப்பையைக் காப்போம்........................................ 22

வாழ்க்கையின் தத்துவம்
- சிறுகதை ........................................24

பார்ப்பன பாசிச எதிர்ப்பின் அரணாக தமிழகம்
*- தோழர் மருதையன்*........................................26

வியாட்நாம் மண்ணில் இராஜராஜசோழர்கள்........................................ 28

வறண்ட தொண்டைக்கு மருத்துவம்........................................ 29

ஆர்.கே. சண்முகம் செட்டியார்
இந்திய ஒன்றியத்தின் முதல் நிதியமைச்சர்........................................ 30

முற்றம் இதழில் வெளியிடுவதற்காக அனுப்பப்படும் படைப்புகளைத் திருத்துவதற்கும் வெளியிடாமல் இருப்பதற்கும் ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு. *- ஆசிரியர்*

காசோலை, வரைவோலை
அனுப்புவோர் "mutram" என்ற பெயருக்கு
எடுத்தனுப்பலாம்.

வாழ்க தமிழ்!

# அறம் தவறும் ஆட்சி



இந்திய ஒன்றியத்தை ஆளும் அதிகார வர்க்கம், ஒவ்வொரு நாளும் சிக்கல்களையே சீதனமாக மக்களுக்குக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. ஒன்றை மறைக்க மற்றொன்று, அதை மறைக்க வேறொன்று, இப்படி நாளும் நரித்தந்திரத் திட்டங்கள். மக்கள் கண்டு கொண்டாலும் கொள்ளாவிட்டாலும், மசோதா இயற்றுதல், சட்டமாக்கல் என்ற தான்தோன்றித்தனமான செயல்பாடுகளை நாம் கண்டு கொண்டிருக்கிறோம்.

கொரானா கால இறப்புகள் எண்ணிக்கையை ஆய்வு செய்கிற சிலர், கடந்த இரண்டாண்டுகளை விட இந்த கொரோனா ஆண்டில் மனித இறப்பு குறைவு என்கிறார்கள். என்ன நடக்கிறது? என்னதான் நடத்த இருக்கிறார்கள்? என்று ஒவ்வொரு குடிமகனும் குழப்பத்திலேயே வாழ்ந்து கொண்டிருக்கிறான். கொடுமையான கொரோனா காலத்தில் பல திட்டங்கள் சட்டமாக்கப்படுகின்றன. எதிர்ப்புத் தெரிவிக்க மக்கள் கூடக்கூடாது என்பதற்காக, கொரோனா ஊரடங்கை பயன்படுத்திக் கொள்கிறார்களோ என்ற ஐயம் மக்கள் மத்தியில் நிலவிக் கொண்டிருக்கிறது.

கல்வி என்பது, எதிர்கால இந்தியாவை நிர்ணயிக்கும் கருவி. அதை, புதிய கல்விக் கொள்கை என்ற பெயரில் பல வேறாக மாற்றும் முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. பேசப்படாத மொழிக்கெல்லாம் பெரும் நிதி செலவிடப்படுவதுடன் முன்னிலைப் படுத்தலும் நிகழ்கிறது. இயற்கை வளங்களை அழிக்கும் வகையில் சுற்றுச்சூழல் வரைவுகள் வருகின்றன. இப்படி மக்களின் அடித்தளங்களையே அசைத்துப் பார்க்கும் செயல்பாடுகளே தற்காலத்தில் காணப்படுகின்றன. இப்படிப்பட்ட செயல்பாடுகள் எல்லாம், வீண் குழப்பங்களுக்கும் பிரிவினைகளுக்கும் காரணமாகி விடும் என்பதை ஏனோ மறந்து திரிகிறார்கள்.

ஒவ்வொரு மனிதனும் உயிருக்கு ஏதும் கேடு நிகழ்ந்துவிடுமோ என்று அச்சப்பட்டுக் கொண்டும், வேலை இல்லாமல் பசியால் வாடிக் கொண்டிருக்கும் இக்காலத்தே, கோயில் கட்டுவதுதான் பிரதமரின் பணியாக இருக்கிறது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு, மக்களின் உயிரையும், வயிறையும் பாராது இருப்பது சரியான தல்ல. எல்லாவற்றிற்கும் முடிவு உண்டு. 'தீதும் நன்றும் பிறர் தர வாரா' என்பதை ஆளும் அரசு கவனத்தில் கொள்வதே அரசுக்கு நல்லது. அறம் சார்ந்த ஆட்சியே, நல்லாட்சி என்று மக்களால் போற்றப்படும். அறநெறி தவறாத ஆட்சியில் தான் மக்கள் நலமாக வாழ்வார்கள்.





# நாடகக் கொட்டாய் முதல்... சினிமாக் கொட்டாய் வரை!

## 6 “‘மனக்கண்’”

**பூவை தயா**



சட்டத்தின் மூலம் திருத்த முடியாத மனித மனங்களை, நாடகத்தின் மூலம் திருத்த முடியும் என்ற முழு நம்பிக்கை கொண்டவர் ஆங்கில நாடகத் தந்தை அறிஞர் பெர்னாட்ஷா! தான் படைத்த நாடகங்களில் சமுதாயத்திற்குப் பயனளிக்கும் அற்புதமான கருத்துக்களுடன் அரசியல், சமூகம், மதம் ஆகியவற்றை ஆய்ந்தறிந்து, எவருக்கும் திகட்டாத வகையில் தித்திக்க வழங்கினார். அவை இனிப்பையும் தந்தது, இடி முழக்கத்தையும் தந்தது என்பது வரலாற்றுச் சான்று.

நாட்டில் நடக்கும் சிலபல குற்றங்களுக்கெல்லாம் வறுமைதான் காரணம் என்பது இவரது வாதம். ஒழுக்கமற்ற செயல், மிருகத்தனமான போக்கு, கோழைத்தனம் ஆகியவை ஏழ்மையில்தான் உருவாகிறது என்பதை திருத்தமாய்ச் சொன்னவர். (இன்றைய காலகட்டத்தில் இவை பரவலாக, எல்லோரிடத்திலும் காண முடிகிறது என்பது ஒரு சாபக்கேடு.)

சமூக அவலங்களை, கொடுமைகளை, நேர்மையற்ற நெறிச் செயல்களை மாற்றியமைக்க எளிமையான வழி நகைச்சுவைதான் என்று ஆணித்தரமாய் உரைத்து, தனது நாடகத்தில் கையாண்டு உலகம் போற்ற வெற்றி கண்டவர் பெர்னாட்ஷா.

மக்களுக்குப் படிப்பினையைத்தராத எந்த இலக்கியமும் உயர்ந்த இலக்கியமாக இருக்க முடியாது என்று உரக்கக் குரல் கொடுத்தவர். எந்த வெற்றியும் என்னைத் தேடி வரவில்லை. எனது கடுமையான உழைப்பாலும் இடைவிடாத முயற்சியாலுமே அந்த வெற்றியை நான் இறுகப் பிடித்துக் கொண்டேன் என்ற பெர்னாட்ஷாவின் கூற்றில் எத்துணை உண்மையுள்ளது என்பதை நாம் அறிவோமாக.

இன்பமும் துன்பமும் பணத்தைச் சார்ந்தவை அல்ல. மனத்தைச் சார்ந்தவை என்றவர், நாம் தேய்ந்த பொருளாகி குப்பையோடு குப்பையாய் மக்கிப் போவதற்குமுன், நம்மை நாம் மகத்தான காரியத்திற்குப் பயன்படுத்தி, நாட்டின் மேன்மைக்கு வழி காண வேண்டும். மேலும் வாழும் காலத்தை மறந்து செருக்குடன் சிறப்புப் பெற எண்ணியவர்கள் மண்ணோடு மண்ணாகிப் போன கதைகளையும் மறந்து விடாதீர்கள் என்று எச்சரிக்கையுடன் நமக்குப் போதனைகளையும் வழங்கியவர். அறிஞர் பெர்னாட்ஷா 1856 இல் பிறந்து, தனது வாழ்நாள் முழுவதும் ஓயாது ஒய்வின்றி உழைத்து 1950இல் இவ்வுலகை விட்டு மறைந்தார். ஒரு நாடகக் கலைஞன் என்கிற முறையில், அவரைப்பற்றி வாசித்ததில் ஒரு சில சிறு குறிப்புகளை இங்கே பகிர்ந்து கொண்டதில் மனமகிழ்ச்சி கொள்கிறேன். அதே போன்று 11 ஆண்டுகள் (1867) பின்னதாகப் பிறந்த நமது தமிழ் நாடகத் தந்தை சங்கரதாஸ் சுவாமிகளைப் பற்றியும் பின்வரும் தொடரில் நினைவு கூற கடமைப்பட்டுள்ளேன்.

சரி... இப்போது எனது தந்தையார் எழுதிய ‘மனக்கண்’ என்ற நாடகத்தைப் பற்றி சிலவற்றை இங்கே நினைவுகூறுகிறேன். இந்த நாடகத்தின் நாயகன் குப்பைக் காகிதம் பொறுக்கி, தனது அன்றாட வாழ்வை நடத்துபவன். அவனது பேச்சிலே சமூகச் சிந்தனையும், பிறர் மீது அக்கறையும் நிறைந்திருக்கும். அவன் பேசும் ஒவ்வொரு சொல்லும் நகைச்சுவையோடு மக்களை சிந்திக்க வைக்கும் கருத்துப் பெட்டகமாகும். இந்த நாடகம் பலமுறை மேடையேறியது. இதில் ஒரு முறை மயிலை ஃபைன் ஆர்ட்ஸ் கிளப்பில் நடைபெறும்போது இறையருட்செல்வர் ஏ.பி.நாகராஜன் சிறப்பு விருந்தினராய்க் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். “கவிஞர் பூவை செங்குட்டுவன் சிறந்த பாடலாசிரியர் தான் என்று எண்ணியிருந்தேன். அவர் மிகச் சிறந்த கதைவசன கர்த்தாவாகவும் திகழுகிறார், என்பதை இந்த நாடகத்தின் மூலம் அறிந்ததில் பெருமகிழ்ச்சி கொள்கிறேன்“ என்றுரைத்தார்.

மேலும் நாடகத்தின் நாயகன் குடந்தை நடராஜன் அவர்களையும் நகைச்சுவைப் பாத்திரமேற்ற எஸ்.எஸ். சந்திரன் அவர்களையும் (திரைப்படங்களில் நடிப்பதற்கு முன்னர்) ‘திரைநீதி’ செல்வம் அவர்களையும் மற்றும் ஏனைய கலைஞர்களையும் மனமார வாழ்த்தி

னார். இந்த நிகழ்வு என்மனதில் நங்கூரம் பாய்ந்தது போல் நிலை கொண்டிருந்தது.

இதன்பின்னர் இந்த நாடகத்தைத் தொடர்ந்து நடத்தப் போவதாக நடிகர் கள்ளபார்ட் நடராஜன் அவர்கள் வீட்டிற்கு வந்து, அப்பாவைச் சந்தித்துப் பேசி 'மனக்கண்' ஸ்கிரிப்ட்டை வாங்கிச் சென்றார். ஒருமுறை லாயிட்ஸ் காலனியில் உள்ள ஒரு மண்டபத்தில் கள்ளபார்ட் அவர்கள் 'மனக்கண்' நாடகத்தை நடத்தினார். நானும் அப்பாவும், அவர் அந்த நாடகத்தில் நடித்தவிதம் பார்த்து பெரிதும் மகிழ்ந்தோம். அதன்பின்னர் பல ஊர்களில் நாடகத்தை நடத்திக் கொண்டிருந்தார். ஒவ்வொரு முறையும் ஊருக்குச் சென்று வந்ததும் எங்கள் வீட்டிற்கு வந்து நாடகத்திற்கான ராயல்டி தொகையை (ரூபாய் 15) கொடுத்துச் செல்வார். பலமுறை வீட்டில் உள்ளோர் வெளியே சென்ற நேரத்தில் என்னிடம் கொடுத்துச் செல்வார். பின்னாளில் அவரின் பெருந்தகை குணத்தை என் நண்பர்களிடம் பெருமைபடக் கூறி மகிழ்ந்திருக்கிறேன்.

இந்த நிகழ்வெல்லாம் நடந்து ஏறக்குறைய இருபது ஆண்டுகளுக்குப் பின் (1992) அதே மயிலை ஃபைன் ஆர்ட்ஸ் கிளப்பில் நண்பர் மதுரை கண்ணன் எனது சகோதரர் பூவை.செ.ரவி இருவரும் எடுத்து நடத்த, அந்த 'மனக்கண்' நாடகத்தில் நான் கதாநாயகனாக நடித்தேன். முக்கிய கதாபாத்திரத்தில் என் நண்பர்களான மதுரை கண்ணனும், டி.மல்லிக்ராஜூம், மேலும் எனது சித்தி மகன்களான, இன்றைய திரைப்பட நடிகர் உதயாவும், இயக்குனர் ஏ.எல்.விஜய்யும் அக்கா மகன்களான சிவகுமார், சரவணனும் நடித்தனர். அப்பா எழுதிய நாடகத்தில் நான் கதாநாயகனாக நடித்து எல்லோருடைய பாராட்டுதல்களையும் பெற்றேன். அப்பா எழுதி, நான் நடித்து இயக்கியது எனக்குக் கிடைத்த பெரும் பாக்கியமாக எண்ணுகிறேன். மேலும் அப்பா எழுதிய பல நூல்களின் முன்னுரையில் எனது எழுத்திலும் கருத்திலும் திருத்தம் செய்யும் அறிவுத்திறன், என் மகன் பூவைதயாவிற்கு உண்டு என்று குறிப்பிடுவார்கள். இவையும் நான் பெற்ற பேறாகும்.

இங்கே ஒன்றை குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தின் தீவிரத் தொண்டராகவும் அதன் வளர்ச்சிக்காகவும் சொந்த ஊரான கீழப்பூங்குடியில் கழகப்பணி ஆற்றி வந்த அப்பாவிற்கு 1954இல் சீர்திருத்த முறைப்படி திருமணம் நடந்தது. மூன்றாண்டுகளுக்குப் பிறகு நான் பிறந்தேன். எனக்கு என்ன பெயர் சூட்டுவது என்று யோசித்தார்கள், அதன் பின்னர் கலைஞர் அவர்களுக்கு கடிதம் எழுதி, என் மகனுக்கான பெயரை நீங்கள்தான் சூட்ட வேண்டும் எனக் கேட்க, கலைஞரும் பதில் கடிதம் அனுப்பினார். அதில் எனக்கு 'கருணானந்தம்' என்ற பெயரை வழி மொழிந்தார்.

ஆனால், கருணானந்தம் என்ற பெயர் ஏனோ அப்பாவிற்குப் பிடிக்கவில்லை. அந்த கால கட்டத்தில் அப்பா 'தயாநிதி' என்ற ஒரு நாடகத்தை எழுதி நடத்திக் கொண்டிருந்தார்கள். இந்த நிலையில் என்பெயருக்கான அப்பாவின் யோசனைக்குத் தீர்வு கிடைத்துவிட்டது. 'தயாநிதி' ஆமாம்... எனக்கு நாடகத்தின் தலைப்பையே பெயராகச் சூட்டி விட்டார்கள்.

தயாநிதி என்ற நாடகத்தின் 'டைட்டிலையே' எனக்குப் பெயராக வைத்ததினாலோ என்னவோ, நாடகமே எனது வாழ்வாதாரமாகப் போய்விட்டது.

**பயணம் தொடரும்...**

**ஒருநாள் என்பது நல்ல நாள் அல்லது கெட்ட நாளாக; ஒரு நேரம் என்பது நல்லநேரம் அல்லது கெட்ட நேரமாக எப்படி அமையும் ?**

ஒரே நாளில் ஒரே நேரத்தில் ஒரு சிலருக்கு நல்லதும் மற்றவர்களுக்குத் தீயதும் இழப்புகளும் ஏற்படத்தான் செய்கின்றன என்பதை எவரும் மறுத்தி இயலாது.

அதேபோல், "அவருக்கு நேரம் சரியில்லை; இவருக்கு நல்ல நேரம்; நல்ல காலம், கெட்ட காலம்" என்று நிகழ்வுகளை நேரத்தோடு தொடர்பு படுத்துவதும் தவறான அடிப்படையில் அமைந்த ஒரு மூட நம்பிக்கை ஆகும்."

இந்த மாதத்தில் இந்த நாளில், அல்லது இந்த நேரத்தில் சில புதிய செயல்கள், திருமணம், புதிய வீடு புகுதல், வியாபாரங்கள் போன்ற நல்லவற்றை துவக்கக்கூடாது, அப்படி துவங்கினால் ,அது நிறைவேறாது; அது கெடுதலாகத்தான் அமையும், மற்றும் அது இழப்பை ஏற்படுத்தும்" என்று கருதி அவற்றைத் தவிர்த்து எச்சரிக்கையாக நல்லநாள், நல்ல நேரம் பார்த்து செய்கின்றார்கள்.

அப்படி நல்ல மாதம், நல்ல நாள் பார்த்து செய்யப்பட்ட எத்தனையோ திருமணம் போன்ற செயல்கள் கெடுதியையும், மண விலக்குகளையும், விபத்து, தற்கொலை போன்ற உயிரிழப்பையும் பெரும் துன்பத்தை ஏற்படுத்திக் கொண்டிருப்பதை நாளும் பார்த்துக் கொண்டுதான் இருக்கின்றோம்.

அப்துல் கலாமிடம் ஒருமுறை ஒரு மாணவி, ''நல்ல நாள், கெட்ட நாள் எது?'' என்று கேட்டாள்.

அதற்கு அப்துல் கலாம்,

''பூமி மீது சூரிய ஒளிபட்டால் அது பகல். படாவிட்டால் இரவு. இதில் நல்லது கெட்டது என்று எதுவும் இல்லை'' என்றார்.

ஆம்.. நண்பர்களே... நல்ல நேரம், கெட்ட நேரம் எல்லாம் நாம் நமது வசதிக்காக வைத்துக் கொண்டது.

நம் மீதும், நம் செயல்கள் மீதும் நம்பிக்கை இல்லாத போது "நல்ல நேரங்களில்" சிக்கிக் கொள்கின்றோம்.

நேரம் என்பதை நாம் வகுத்துவிட்டோம், அதன் பாதையில் அது செல்கிறது. இதில் நல்ல நேரம் எங்கே, கெட்ட நேரம் எங்கே இருக்கிறது ?

ஒரு முறை இந்தப் பழக்கத்திற்கு அடிமையாகிவிட்டால், பின்பு எல்லாவற்றிற்கும் "நேரம், காலம்" பார்க்க ஆரம்பித்து விடுவோம்.

அன்பு நிறைந்த நண்பர்களுக்கு, வணக்கம்!

நியூஸ் 18 தமிழ்நாடு தொலைக்காட்சியின் தொடக்க நாள் முதல், இன்று வரையிலும் நாம் இணைந்து பயணித்திருக்கிறோம். கடந்த நான்காண்டு காலத்துக்கும் மேலான கூட்டு உழைப்பின் காரணமாக தமிழ்நாட்டின் தனித்துவம் மிகுந்த தொலைக் காட்சி யாக, தமிழக மக்களின் உணர்வுகளைப் பிரதிபலிக்கும் காலக்கண்ணாடியாக, மக்கள் நலனை முன்னிறுத்தும் நம்பிக்கைக்குரிய ஊடக நிறுவனமாக இன்று பரிண மித்திருக்கிறோம். இதில் உங்கள் ஒவ்வொருவரின் அயராத உழைப்பும் பங்களிப்பும் போற்றுதலுக்குரியது.

ஆழ்வார்ப்பேட்டையில் ஒரு சிறிய அறையிலும், ஹைதராபாத்தில் சில ஊழியர்களுமாக நாம் பணி யாற்றிக் கொண்டிருந்த நாளில், என் மதிப்பிற்குரிய நண்பர் வினவியது என் நினைவுக்கு வருகிறது. "தமிழகத்தில் ஏற்கெனவே இத்தனை தொலைக் காட்சிகள் இருக்கின்றனவே, இன்னொரு தொலைக் காட்சிக்குத் தேவையும் இடமும் இருக்கிறதா?" என்பதுதான் அவரது வினா. அக்கறையும் கவலையும் ஒருசேர அதில் வெளிப்பட்டன.

அடுத்த சில வாரங்களிலேயே, ஒரு காணொளியைப் பகிர்ந்து பாராட்டுச் செய்தியும் அனுப்பி இருந்தார். சல்லிக்கட்டுப் போராட்டக்களத்தின் இறுதி நாளில், காவலர் ஒருவரே ஆட்டோவுக்கு தீ வைக்கும் காட்சி அது. நம் தொலைக்காட்சியில் பிரத்யேகமாக ஒளிபரப்பாகி தமிழகத்தையே உலுக்கியது அந்தக் காட்சி.

மக்களைப் பெரிதும் பாதித்த இயற்கைப் பேரிடர்கள், (நீலம் புயல் தொடங்கி, கஜா மற்றும் ஒக்கி என நீண்ட பாதிப்புகள்), தமிழ்நாடு நலன் சார்ந்த பிரச்சனைகள், மக்கள் அன்றாடம் எதிர் கொள்ளும் வாழ்வாதாரப் பிரச்னைகள், ஜி.எஸ்டி, பண மதிப்பிழப்பு, நீட் மற்றும் சமூக நீதி பறிப்பு என எல்லா பிரச்னைகளிலுமே உண்மையும் மக்கள் நலனுமே நம்மை வழி நடத்தின. மக்களின் அசலான குரலாக நாம் எதிரொலிப்பதை மக்கள் அங்கீகரித்ததன் விளைவே, போட்டி மிகுந்த தமிழ் ஊடகச் சூழலில் நமக்கென கிடைத்த தனித்தவமான இடம். நியூஸ் 18 இன் மைக் அதிகம் நீண்டது. அரசியல்வாதிகளையோ அதிகாரிகளையோ நோக்கி அல்ல. மாறாக, குரலற்ற, சாமானிய மக்களை நோக்கியே என்பதை தமிழ்கூறு நல்லுலகம் அறியும்.

மக்களவைத் தேர்தல், உள்ளாட்சித் தேர்தல், இடைத் தேர்தல்கள் என பல தேர்தல் செய்திகளைச் சேகரித்த தருணத்தில், நாம் எந்தக் கட்சிக்கும் சார் பானவர்கள் அல்ல, பொதுவான ஊடகம் என மக்களும் அரசியல் கட்சிகளின் தலைவர்களும் அங்கீக ரித்ததை உலகம் அறியும். திருமதி சசிகலா அவர்களின் முதல் பேட்டியும், முதலமைச்சர் திரு.எடப்பாடி பழனி சாமி அவர்களின் விரிவான நேர்காணலும், எதிர்க் கட்சித் தலைவர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் உள்பட பல்வேறு கட்சித் தலைவர்களின் நேர்காண லும் நமது விருப்பு, வெறுப்பற்ற சார்பு நிலைகளற்ற ஊடக நெறிகளுக்குச் சான்றாக அமைந்தன. மக்களின் நம்பிக்கையை எந்த வொரு ஊடகமும் அவ்வளவு எளிதில் பெற்றதில்லை. அர்ப்பணிப்பாலும், கடின உழைப்பாலும், எளிய மக்கள் சார்பில் நின்று அவர் களின் துயரத்தையும் உணர்வுகளையும் அச்சமின்றி




# விடை பெறுகிறேன், நன்றி! நியூஸ் 18 குணசேகரன்!!




வெளிப்படுத்தியதாலும் மக்கள் நமக்கு உயர்வைத் தந்தார்கள். அதனால் நாம் சில தருணங்களில் இருட்டடிப்புக்கும் ஆளானோம் என்பதை மறப்பதற் கில்லை.

செய்திகளில் ஆழம், துல்லியம், சொல்வதில் நேர்த்தி, சார்பற்றத் தன்மை, நியாயத்தின் பக்கம் துணிந்து நிற்பது, பேசுபொருளில் தெளிவு, எளிய மனிதர்கள் மீது கருணை என ஊடக அறம் வழுவாத நமது பணி, தமிழ் ஊடக வரலாற்றில் என்றும் பேசு பொருளாக இருக்கும் என்பதிலும், அதில் உங்கள் ஒவ்வொருவரின் பங்களிப்பும் பெரிது என்பதிலும் எனக்குத் திடமான நம்பிக்கை உண்டு. தமிழகத்தின் இளமைத் துடிப்பு மிக்க தொலைக்காட்சி, தமிழகத்தின் புதியதோர் அடையாளமாகவும் உருவெடுத்தது. உழைப் பில் அயராத ஈடுபாடும், இதழியலின் மீது தணியாத தாகமும் சமூகத்தின் மீது அக்கறையும் கொண்ட ஊடக வியலாளர்களை வழி நடத்தியது எனக்கு எப்பொழு தும் நிறைவு தரும் தருணம்.

மகுடம், உழவன், சிகரம் என தமிழ்த் திறமைகளை யும் உழவர்களையும் கொண்டாட நாம் அமைத்த மேடை, நமக்கான மற்றொரு மைல்கல், தமிழ்ச் சமூகத் தின் பெரும் ஆளுமைகள் நம் விருதுகளை அங்கீகரித் தார்கள். அது, நமது தொலைக்காட்சியின் நம்பகத்தன் மையை மேலும் உயர்த்தியது, பெருமையைப் பறை சாற்றியது.

“எனக்குத் தகுதியும் திறமையும் உள்ளது. கடினமாக உழைக்கத் தயாராக இருக்கிறேன். எனக்கு வாய்ப்புத் தாருங்கள்,” என நாடிய பலருக்கு வாய்ப்பு வாசல் களைத் திறந்துவிட ஒரு கருவியாக இருந்தேன் என்பதும், அதற்கு நிறுவனம் ஒரு வாய்ப்பாக இருந்தது என்பதும் எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி. போலவே, வேலை தேடி நாடிய பல நூறு நண்பர்களுக்கு அவர் களின் தேவையை நிறைவு செய்ய முடியாமல் போனதில் எனக்கு மிகுந்த வருத்தமும் உண்டு.

ஊடகத்துறையில் இது எனது 25ஆம் ஆண்டு. தினமணி, தி இந்து, டைம்ஸ் ஆப் இந்தியா, டெக்கான் கிரானிக்ள், புதிய தலைமுறை என நீண்ட பயணத்தில், நியூஸ் 18 மறக்க முடியாத பல அனுபவங்களைத் தந்தது. ஓர் ஊழியனுக்கும் நிறுவனத்துக்கும் உள்ள உறவு என்பதைத் தாண்டி நிறுவன ஆசிரியராக நியூஸ் 18 உடனான எனது பிணைப்பு உணர்வுப் பூர்வமானது. பத்திரிகையாளனாக, நெறியாள னாக அறியப்பட்ட என்னை, ஓர் ஆசிரியனாக உயர்த்தியதும், ஒரு பிரம்மாண்டமான நிறுவனத்தை, இளைஞர் சக்தியைக் கொண்டு வெற்றிகரமாகக் கட்டி எழுப்பி வழிநடத்திட முடியும் என்ற நம்பிக்கையை எனக்குள் விதைத்ததிலும் நியூஸ் 18 இன் பங்கு அளப் பரியது. ஒரு தேசிய அளவிலான குழுமத்தில் தொழில் ரீதியில் கற்றுக் கொண்ட அனுபவங் கள் ஏராளம்.

**என் நேசத்துக்குரிய நண்பர்களே,**

தனி மனித வாழ்விலும், நிறுவனங்களின் போக்கி லும் மாற்றங்கள் தவிரக்க இயலாதவை. காலத்தின் போக்கில் நிகழும் எந்த மாற்றத்தையும், கசப்பின் வடுக் களின்றி கடந்து செல்வதே சிறப்பானது. ஆம். நியூஸ் 18 தமிழ்நாடு ஆசிரியர் பொறுப்பில் இருந்து விலகு கிறேன். இதுவரை நீங்கள் காட்டிவந்த மாசற்ற அன்புக் கும், அளித்து வந்த ஒத்துழைப்புக்கும் மிக்க நன்றி.

நாம் இணைந்து பல சாதனைகளைச் செய்திருக் கிறோம். சில தருணங்களில் கடிந்து கொண்டிருக் கிறேன், உச்சி மோந்திருக்கிறேன், உங்கள் பணி அதில் இருக்க வேண்டிய நேர்த்தி, தொழிலில் நீங்கள் சிறந்து விளங்கி தனித்தன்மை மிக்கவர்களாக மிளிர வேண்டும் என்ற நல்லெண்ணத்திலேயே அவ்வாறு நடந்து கொண்டிருப்பேன் என்பதை நீங்கள் அறிவீர்கள்.

மக்கள் நலனே ஊடகப் பணி, நிறையப் படியுங்கள். எதையும் திறந்த மனதுடன் அணுகுங்கள். தமிழ் நாட்டின் தனித்தன்மையான உளவியலை கற்றுண ருங்கள். உற்சாகமாக, கடினமான உழைப்பை ஈடுபாட் டுடன் நல்குங்கள். முதல் தலைமுறையில் ஊடக வாழ்வைத் தொழிலாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டவர் களுக்கு, அவர்களது அறிவும், உழைப்பும், நேர்மையும், அர்ப்பணிப்புமே, வாளும் கேடயமும்! உண்மையைத் தேடும் பயணத்தில், ஊடக அறத்தைப் பின்பற்றி தொடந்து முன்னேறிச் செல்லுங்கள்.

நியூஸ் 18 தமிழ்நாடு என்ற நம் நேசத்துக்குரிய குழந்தைக்கும், எனதன்பு நண்பர்களான உங்கள் அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த வாழ்த்துகள். வாழ்க, வளர்க.

வற்றா அன்புடன்,

**மு.குணசேகரன்.**

## அன்பு நிறைந்த நண்பர்களுக்கு, வணக்கம்!

சன் நியூஸ் தொலைக்காட்சியின் தலைமை ஆசிரியராக (Editor-in-Chief) பொறுப்பேற்க விருக்கிறேன் என்ற செய்தியை உங்களோடு பகிர்ந்து கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். அளவற்ற ஆதரவை அள்ளி வழங்கிய அனைவரின் கரங்களையும் நெகிழ்ச்சியோடு பற்றிக் கொள்கிறேன்.

அறமும், உண்மையும் மக்கள் நலனுமே ஊடகப் பணியின் முதன்மையான நெறிகள் என்பதில் எனக்குள்ள அசைக்க முடியாத நம்பிக்கையை மீண்டும் அழுத்தந்திருத்தமாக வெளிப்படுத்த விழைகிறேன்.

நேயர்களான மாணவர்கள், ஆசிரியர், பல்துறை வல்லுனர்கள், அரசியல் தலைவர்கள், திரைத்துறை மற்றும் இலக்கிய ஆளுமைகள், உயர் அதிகாரிகள், நீதித்துறையினர், சக பத்திரிகையாளர்கள் என்று பல் வேறு தளங்களிலிருந்து நீண்ட ஆதரவுக்கரங்கள் சற்றும் எதிர்பாராதவை. தொலைபேசியிலும் சமூக வலைதளங்களிலும் வாஞ்சையும் அன்பும் பொழிந்த ஒவ்வொருவருக்கும் என் நன்றி.

சமூக அரசியல், பண்பாட்டுத் தளங்களில் தமிழ் நாடு ஒரு தனித்துவமான மாநிலம் என்பதை அறிவுப் பூர்வமாகவும் அனுபவ ரீதியாகவும் நன்கறிவேன். அனால் இந்த உண்மையை, உணர்வுப்பூர்வமாகக் கண்டது இந்தத் தருணத்தில் தான்!

நேரலைகளிலேயே மூழ்கிப் போயிருந்த ஊடகவியலாளனுக்கு அரண் சேர்க்கவும் உரம் ஊட்டவும் தன்னிச்சையாக மக்களிடம் எழுந்த அன்பலை, என்னைத் திக்குமுக்காடச் செய்தது. நெகிழ்ந்து போனேன்.

தனிப்பட்ட ஓர் ஊடகவியலாளருக்குக் கிடைத்த ஆதரவு என்பதைவிட, அவர் பிரதிநிதித்துவப்படுத்தும் இதழியல் அறத்துக்கு மக்கள் தரும் அங்கீகாரம் என இதை எடுத்துக் கொள்வதே பொருத்தமானதாக இருக்கும் என்று கருதுகிறேன். எளிய மக்களின் நலனை முன்னிறுத்தி, தங்கள் மனசாட்சியின் குரலாக ஒலிக்கும் ஒருவருக்கு தமிழ் மக்கள் தங்களுடைய பேராதரவைத் திரட்டி அளித்திருக்கிறார்கள் என்றே உணர்கிறேன்.

என்னுடன் இணைந்து நின்ற அனைவருக்கும் மனமார்ந்த நன்றி. வாய்ப்பளித்த சன் குழுமத்துக்கும் திறமையையும் தொழில் நேர்த்தியையும் எப்போதும் அங்கீகரிக்கும் திரு. கலாநிதி மாறன் அவர்களுக்கும் என் நன்றி.

நடுநிலை வழுவாது, உண்மையின் பக்கம் நின்று, ஊடக அறம் பேணி, சமரசமின்றி மக்களுக்காகத் தொடர்ந்து இயங்குவேன். மக்களுக்கான இதழியலைத் தொடர்ந்து உயர்த்திப் பிடிப்பேன் என்று மீண்டும் உறுதி ஏற்பதே, நீங்கள் கொண்டுள்ள நம்பிக்கைக்கும் வெளிப்படுத்திய அன்புக்கும் காட்டும் நன்றி என உணர்கிறேன். நன்றி.

வற்றா அன்புடன்

**மு.குணசேகரன்.**

## ஒரு வரியில் இயற்கை மருத்துவம்!

*1. வரட்டு இருமலுக்கு சிறந்தது திராட்சை!*

*2. முதுகுத்தண்டு வலிக்கு பப்பாளிப்பழம் சாப்பிடு!*

*3. இரத்த அழுத்தம் குறைய எலுச்சை!*

*4. மூளைக்கு வலுவூட்ட வல்லாரை!*

*5. காது மந்தம் போக்கும் தூதுவளை!*

*6. மூத்திரக்கடுப்பு மாற்ற பசலைக் கீரை!*

*7. பித்த மயக்கம் தீர புளியாரை!*

*8. உடற்சூடு அகல முருங்கைக் கீரை!*

*9. நீரிழிவு நோய்க்கு துளசி இலை!*

*10. இரத்தத்தை சுத்திகரிக்க வெள்ளைப்பூடு!*

*11. கண்பார்வை அதிகரிக்க கேரட், புதினா, ஏலக்காய்!*

*12. கடுமையான ஜலதோசத்திற்கு தேனும் எலுமிச்சையும்!*

*13. வாழ்நாளை நீடிக்க நெல்லிக்கனி!*

*14. சர்க்கரை நோயை கட்டுப்படுத்த வெந்தயம்!*

*15. கொழுப்புச் சத்தை மிளகு குறைக்கும்!*

*16. இளைத்த உடல் பெருக்க மிளகு!*

*17. பொடுகைப் போக்க தயிரில் குளி!*

*18. மூலநோய்க்கு கருணைக்கிழங்கு!*

*19. இதய பலவீனம் போக்க மாதுளை!*

*20. வெள்ளை வெட்டை தீர அன்னாசி!*

*21. காதுவலி தீர எலுமிச்சம் சாறு நாலு துளி காதில் விடுக!*

*22. பீனீசம் தலைவலி நீங்க மிளகுப் பொடியுடன் வெல்லம் சேர்த்து உண்!*

*23, பொன்னாங்காணி உண்டால் நோய் தணிந்து உடல் தேறும்!*

*24. வாழைத்தண்டு சிறு நீரகக்கற்களை கரைக்கும்!*

*25. மலத்தை இளக்கும் ரோஜா இதழ்கள்!*

*26. மாதுளம் பிஞ்சு பேதியை நிறுத்தும்!*



# நட்பு

நட்பு என்பது
தொடர்கதை
எந்த இடத்திலும்
எந்த நேரத்திலும்

மனமதை புரிந்து
மனதோடு இணைந்திடும்
உறவே நட்பு

துன்பத்திலும்
இன்பத்திலும்
கைகொடுக்கும்
இன்னல்களுக்கு
விடை கொடுக்கும்
நட்பைப் பாராட்டியே
வாழ்ந்திடும்
எவ்வளவு தூரம்
இருந்தாலும்
மகிழ்வுடன் வாழ்த்தும்

சிறுவயது நட்பு
இன்றுவரை தொடரும்
அன்பே மேலோங்கும்
சின்னப் பிள்ளையாக
இருந்தபோது
பூவரசன் இலையில்
பீப்பி செய்து
ஊதிய ஞாபகம்
நுங்கு வண்டி
ஒட்டிய ஞாபகம்
ஓடி விளையாடி
அடித்து திட்டித்தீர்த்து
பழம் விடும் ஞாபகம்
வெகுதூரம் நடந்த
கால் இன்று ஏங்குது
திரும்புமா பசுமை
நினைவுகள்

என்றும் நட்புடன்
புலனத்தில் கிடைத்த
நட்புகள் என்னை
கவிதை எழுத வைத்தன
கவிஞனென்ற சான்றும்
பெற்றிடவே துணைபுரிந்தன
நட்புகள்...
நட்பு வாழ்வாங்கு வாழ
வாழ்த்துகிறேன்...

**வாணியம்பாடி தியாகராாசன்.**

# கனவு

முன் வாய்க்கால் வழிதான்
பின் வாய்க்கால் போகும்
நியதியைப் பொய்யாக்கிய
சைக்கிளெனும் மிதிவண்டி

பின் சக்கரம் சுழல
முன் சக்கரம் முன்னேற
மிதிக்கும் வரை ஓடும்
மிதி நின்றால் நிற்கும்
மின்சக்தியோ
எரிபொருளோ
தேவையில்லா ஏழை வாகனம்

சிரத்தையாய் மேடேறி
சுலபமாய் கீழிறங்கி
இரு கை விரித்து
வானம் நோக்கி
அச்சம் என்பது மடமையடா
விசிலடித்து பாட்டுப் பாடி
பின்னிருக்கை நண்பனோட
கும்மாள கூத்தடித்ததும்

சிவப்புத் தொப்பி காவலரை
கவனியாது பிடிபட்டு
கை கால் நடுங்கி
டிரவுசர் நனைந்ததும்
ஆண்டு பல கடந்தபின்
முற்றத்து காட்சிப் பொருளான
மிதிவண்டி காணும்போது
இப்போது ஞாபகம் வருதே!
மிதிவண்டி பயணமது
சுகமான சுகமே!

இளந்தேவன்,
திருச்சி.



**முதலாளித்துவ ஜனநாயகம் என்றால் என்ன ?**

5 ஆண்டுகளுக்கு ஒருமுறை 'கார்ப்பரேட் நிறுவன முதலாளி வர்க்கத்திற்காக'

நம்மை சுரண்டிக் கொள்ள, ஒடுக்கிக் கொள்ள நாம் எந்த கட்சிக்கு அனுமதி அளிக்கிறோம் என்பதே முதலாளித்துவ ஜனநாயக தேர்தல் எனப்படுவது.

**முதலாளித்துவகட்சிகளின் தேர்தல் என்றால் என்ன?**

முதலாளித்துவ கட்சிகளுக்கு வாக்களிப்பதன் மூலம், நமது தலைவிதியை / நமது அதிகாரத்தை / கார்ப்பரேட் நிறுவன முதலாளி வர்க்கத்திடம் ஒப்படைக்கும் செயல் நடைமுறையையே நாம் தேர்தல் என ஏற்கிறோம்.

**முதலாளித்துவகட்சிகள் நம்பிக்கை வியாபாரிகளா ?**

ஆம். முதலாளித்துவ கட்சிகள் கார்ப்பரேட் நிறுவன முதலாளி வர்க்கத்தின் ஏஜெண்டுகளே.

கடவுளை ஏற்கச் செய்யும் மதவாதிகளைப் போன்று,

கார்ப்பரேட் நிறுவன முதலாளி வர்க்கம் மக்களுக்கு நல்லது செய்யும் என்று ஏற்கச் செய்யும் 'நம்பிக்கை வியாபாரிகளே' முதலாளித்துவ கட்சிகள்.

**வாக்களிப்பது நமது ஜனநாயக உரிமை என்பதன் பொருள் என்ன ?**

பெண் தாலியை ஏற்பது போன்று,

தேர்தல் மூலம், கார்ப்பரேட் நிறுவன முதலாளி களை எஜமானனாக , ஆளும் வர்க்கமாக ஏற்று, 'நமது அடிமைத்தனத்தை ஏற்பததையே' நாம் ஜனநாயக உரிமை என அழைத்துக் கொள்கிறோம்.

**சட்டசபை, பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு, அதிக ஊதியமும் எண்ணற்ற சலுகைகளும் ஏன் வழங்கப்படுகிறது ?**

மக்களுக்கு 'எதிராக', கார்ப்பரேட் நிறுவன முதலாளி வர்க்கத்திற்கு 'ஆதரவாக' செயல்பட.

**இடதுசாரிகள், ஜனநாயக சக்திகள் என்போர் யார்?**

ஒடுக்குமுறையாளனையும், சுரண்டலாளனையும் தேர்வு செய்து விட்டு, ஜனநாயகத்திற்காக போராடும் பிழைப்புவாத அரசியல்வாதிகளே, இவர்கள்.

**முதலாளித்துவ கட்சிகள் என்போர் யார் ?**

திருமணத்தை நடத்தி வைக்கும் புரோகிதர்களைப் போன்றவர்களே முதலாளித்துவ கட்சிகள்.

கார்ப்பரேட் நிறுவன முதலாளி வர்க்கத்திற்கும் மக்களுக்கும் இடையில் 'அடிமைத்தனத்தை' ஏற்கச் செய்யும் புரோகிதர்களே முதலாளித்துவ கட்சிகள். இதில் ஐயம் கொள்ள ஏதுமில்லை.



# சித்த மருத்துவம்

சிறுநீரகம் மற்றும் பித்தப்பையில் இருக்கும் கற்கள் கரைய, சாப்பிட வேண்டிய காய், கனிகள்.

முளைக்கீரை, சாட்டரணை, யானை நெருஞ்சி, சிறு நெருஞ்சி, கரிசலாங்கண்ணி கீரைகளும், வாழைத்தண்டும் சாப்பிட்டால் சிறுநீரகம், பித்தப்பையில் கற்களைக் கரைக்கும்.

கீரைகளை வாரம் இரு முறை, தாராளமாக சாப்பிடலாம். தினமும் வாழைத்தண்டு சாறு எடுத்து, பலர் சாப்பிடுகின்றனர். அது தவறு, உடலில் உள்ள உயிர் ஆற்றலை உறிஞ்சிவிடும் என்பதால், பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை சாப்பிடலாம்.

பூசணிக்காய், நூக்கல், வெள்ளை முள்ளங்கி, கோவைக் காய், பழங்களில் ஆப்பிள், சாத்துக்குடி, அன்னாச் சிப்பழம், மாதுளம்பழம், ஆரஞ்சு, பேரிக்காய், கொய்யா, கரும்புச்சாறு போன்றவை சாப்பிடலாம்.

கரிசலாங்கண்ணிக் கீரையை பச்சையாகவே, சமையல் செய்தோ, நாள்தோறும் உட்கொண்டால், பித்தப்பை, சிறுநீரக கற்கள் கரைந்து மறைந்தே போய் விடும். இந்தக் கீரையில் உள்ள பழுப்பு இலைகளை நீக்கி, வாயில் போட்டு மென்று சாற்றை விழுங்கி, சக்கையைப் பல் தேய்க்கலாம். தவிர, வாய் முழுவதும் நாக்கு, உள்நாக்கு உட்பட மேலும் கீழும் விரல் களால் தேய்த்தால், மூக்கு, தொண்டையிலுள்ள கபம் அந்நேரமே வெளியாகும். பித்தப்பையில் கற்கள் இருந்தால், அந்நேரமே பித்தம் வெளியேறும். அதிலுள்ள கற்கள் வாந்தி, மலம் மூலம் வெளியேறும். மேலும் சிறுநீரகம் சுத்தப்படுவ துடன், சிறுநீர்ப் பையில் கற்கள் இருந்தால், அவை சிறுநீரில் கரைந்து வெளியேறும்.

கரிசலாங்கண்ணி கீரையை உண்டால், கபநீர் வெளி யேறுவதால், சுவாசப்பையும், நுரையீரலும், பித்தநீர் வெளி யேறுவதால், கல்லீரலும், பித்தப்பையும், மலம் வெளியேறு வதால், பெருங்குடலும், நீர் பிரிவதால் சிறுநீர்ப்பையும் சுத்தம் அடைகின்றன.

வெள்ளரிக்காய், முட்டைகோஸ், வெங்காயம், பூண்டு சாப்பிடுவதால், சிறுநீரகம் நன்றாக இயங்க உதவுவதுடன், நீர் நன்றாகக் குடித்தால் கற்கள் சேர்ந்தாலும், சிறுநீரில் பிரிந்து வந்துவிடும். மேலும், சிறுநீரகம், பித்தப்பையின் கழிவுகளை வெளியேற்ற. உடல் தாகமாக தண்ணீர் கேட்கும். ஆனால், நாம் அந்த உடல் மொழியை அலட்சியப்படுத்துகிறோம். இது தவறு தாகம் எடுக்கும்போது, தண்ணீர் குடித்தால், பித்தப்பை, சிறுநீரகப்பை சிறப்பாக இயங்கும்.

அதேபோல் அளவுக்கு அதிகமாக காபி சாப்பிடுபவர் களுக்கு, பித்தப்பையில் நச்சுத்தன்மை உருவாகி, பின் அது கற்களாக மாறும். எனவே, காபி குடிப்பதற்குப் பதில், இஞ்சி டீ குடித்தால், பித்தப்பை சுத்தமாகும்.

## சரியான சாட்டையடி!

*“தமிழ் மட்டுமே தெரிந்தால் தமிழ்நாடு தாண்ட முடியாது“ என்ற தமிழ்நாடு மெட்ரிக் பள்ளிகள் சங்கச் செயலாளரின் கருத்திற்கு, ஒரிசா மாநில முன்னாள் தலைமைச் செயலாளரும், தமிழிலேயே படித்து, முதல் முதலாக தமிழிலேயே ஐஏஎஸ் தேர்வெழுதி கலெக்டர் ஆன ஆர். பாலகிருஷ்ணன் ஐஏஎஸ் அவர்களின் சாட்டையடி.*

*இது ‘தொழில் லாபம்’ கருதிய கருத்து. முதல் போட்டவர்கள் அதைக் காப்பாற்ற முற்படுவது இயற்கைதான். ஆனால், அந்தக் கருத்தை ஓர் அறிவியல் உண்மை போல முன்வைப்பது முறையல்ல.*

*நான் தமிழ் மட்டுமே படித்தவன். தமிழ்நாட்டு எல்லையை முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு தாண்டினேன். எனது பணி என்னை இந்தியாவின் எல்லா மூலைமுடுக்குகளுக்கும் கொண்டு சென்றது. நமது நாட்டில் நான் கால் வைக்காத மாவட்டங்கள் பத்து இருபது கூட இருக்காது. எத்தனை மொழிகள், எத்தனை இடங்கள், உலகின் எல்லாக் கண்டங்களிலும் உள்ள ஏராளமான நாடுகளுக்குப் பணி தொடர்பாக சென்றிருக்கிறேன். தேவைப்படும் போது எத்தனை மொழிகளை வேண்டுமானாலும் கற்றுக் கொள்ள முடியும்.*

*திருப்பூரைத் தேடி உடுத்துகின்றன தேசங்கள். நமது தொழில் முனைவோரும் உழைப்பாளிகளும் பல கண்டங்களில் வாழ்கிறார்கள். அதனால்தான் தமிழ் மொழி பல நாடுகளில் அலுவல் மொழியாக உள்ளது. எனவே தமிழ் கற்றால் தமிழ்நாட்டு எல்லையைத் தாண்ட முடியாது என்றெல்லாம் பேசுவது உள்நோக்கம் உள்ளதே.*

## பதஞ்சலிக்குத் தண்டனை!

பதஞ்சலி நிறுவனத்திற்கு ரூபாய் பத்து லட்சம் அபராதம் – நிரந்தரத் தடை விதித்து சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்புக் கூறியது.

சென்னை திருவான்மியூரைச் சேர்ந்த மருந்து தயாரிப்பு நிறுவனம் ஒன்று, தாக்கல் செய்த மனு மீதான மறு விசா ரணை, நீதிபதி சி.வி.கார்த்திகேயன் முன்பு நடை பெற்றது. விசாரணையின் முடிவில், வணிகச் சின்ன பதிவுத் துறையில் கொரோனில் என்ற பெயரில் ஏதேனும் பொருட்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதா என விசாரிக்காமல், அதே பெயரில் மாத்திரை தயாரித்துள்ளதால், கொரோனில் என்ற பெயரைப் பயன்படுத்த பதஞ்சலி நிறுவனத்திற்கு விதிக்கப்பட்ட தடையை உறுதி செய்தும் பத்து இலட்சம் ரூபாய் தண்டம் விதித்தும் தீர்ப்பளித்தார் நீதியரசர்.

1. மும்மொழித் திட்டம் என்ற பெயரில் இந்தித் திணிப்பு

2. மாணவர்களுக்கு எவ்வகையிலும் பயன்தராத மொழியான சமஸ்கிருதத் திணிப்பு.

3. தொடக்கநிலை முதல் உயர்நிலைப் பள்ளி வரையில் தேவையற்ற நிலையிலான தேசிய அளவிலான தேர்வுகள். (3,5,8 வகுப்புகளுக்கு பொதுத் தேர்வு. 912 வரை செமஸ்டர் தேர்வு)

4. கலை, அறிவியல் பாடங்களுடன், தொழிற் கல்வி என்ற பெயரில் குலக்கல்வித் திணிப்பு.

5. பி.ஏ., பி.எஸ்.சி., பி.காம்., முதலியனவற்றில் சேர்ந்து படிக்க நுழைவுத்தேர்வு.

6. கல்லூரிகளுக்கு தரத்தின் அடிப்படையில் 'நிதி உதவி' என்ற பெயரில், பின்தங்கிய பகுதிகளில் உள்ள கல்லூரிகள் புறக்கணிப்பு.

7. சுமார் 5000 மாணவர்களுக்கு மேல் உள்ள கல்லூரிகள் மட்டுமே செயல்பட முடியும் என்ற நிலையில், கிராமப்புறக் கல்லூரிகள் ஒழிப்பு!

8. நீண்ட காலமாகக் கல்வி மறுக்கப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் நடத்தும் கல்லூரிகள் மூடப்படும்.

9. பல்கலைக் கழகங்கள், கல்லூரிகள் ஆகிய வற்றை நிர்வகிக்க பிரதமர் தலைமையில் டில்லியில் ஒரு உயர்கல்விக் குழு அமைக்கப்படும்.

10. பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் உருவாக்கவும் நடத்தவும் மாநில அரசே நிதி வழங்க வேண்டும். ஆனால், நிர்வகிக்க உரிமை கிடையாது.

11. மாநில அரசின் அதிகாரம் பறிப்பு.

12. பல்கலைக்கழகத் துணைவேந்தரை டில்லியே நியமிக்கும், மாநில அரசுக்கு உரிமை கிடையாது.

13. டில்லியால் நியமிக்கப்படும் துணை வேந்தர்கள், அவர்களுக்கு வேண்டியவர்களையே பல்கலைக் கழகத்தில் உள்ள மற்ற பதவிகளுக்கும் ஆசிரியர் பணியிடங்களுக்கும் நியமிப்பர்.

14. எனவே, பட்டியலினத்தவர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் எந்தப் பதவிகளுக்கும் வர முடியாது.

15. வகுப்புவாரி இடஒதுக்கீடு பற்றித் தெரிவிக்கப்படவில்லை.

16. அனைத்து மாணவர்களுக்கும் கல்வி உதவித் தொகை மதிப்பெண்கள் அடிப்படையிலேயே வழங்கப்படும். அதனால் ஒடுக்கப்பட்ட சமுதாய மாணவர் உரிமை பறிக்கப்படும்.

17. இந்தியா முழுவதற்கும் ஒரே பாடத்திட்டம் என்ற பெயரில் 'ஆரிய பாடத் திட்டம்' கொண்டு வர முயற்சி.

18. ஆரிய நாகரீகம், வரலாறு ஆகியவற்றைத் திணித்துத் தென்னிந்திய நாகரீகம், வரலாற்றைப் புறக்கணிக்க முயற்சி.

19. பாரம்பரியக் கல்வி அறிமுகம் என்ற பெயரில் அறிவியல் சோதனையில் நிற்காத கல்வி திணிப்பு.



# புதிய கல்விக் கொள்கையில் உள்ள மாணவர் விரோதக் கருத்துகள்!

20. ஆக்ஸ்போர்டு, ஹார்வேர்டு போன்ற புகழ்பெற்ற கல்கலைக்கழகங்களை முன்மாதிரியாகக் கொள்ளாமல், நாலந்தா, தட்சசீலம் போன்ற பிற்போக்கான பாடத் திட்டங்களைக் கொண்ட பல்கலைக்கழகங்களை முன்மாதிரியாகக் கொண்டது.

21. மாணவர்களுக்கு வழங்கப்படும் மதிய உணவு 5ஆம் வகுப்பு வரையில் மட்டுமே தரப்படும்.

22. ஆசிரியர்களுக்கு பதவி உயர்வு பணிமூப்பு அடிப்படையில் இல்லாமல், தகுதி அடிப்படையிலேயே வழங்கப்படும்.

23. தன்னார்வத் தொண்டர்கள் என்ற போர்வையில் ஆர்.எஸ்.எஸ்.அமைப்பைச் சேர்ந்தவர்களும் மாணவர்களுக்கு வகுப்புகள் எடுப்பர்.

24. முதலாம் வகுப்புப் படிக்கும் மாணவர்கள்கூட தேசிய முகாம்களில் கலந்து கொள்ள வேண்டும்.

25. பள்ளிக் குழந்தைகளின் பெற்றோர்களுக்கும் பாடத்திட்டம் (ஷிறீணீதீஷுவ) உண்டு.

26. மாணவர்கள் எதிர்கொள்ளும் அனைத்துத் தேர்வுகளையும் நடத்த தனியார் வாரியம் அமைக்கப்படும்.

27. பெண்கள் கல்வியைப் பற்றி எவ்விதக் குறிப்பும் இல்லை.

**பேராசிரியர் அ. இராமசாமி**

முன்னாள் துணைவேந்தர்.

# புதிய கல்வித் திட்டம் - புதிய வருணாசிரமத் திட்டம்

பள்ளிக் கல்வியிலிருந்து பல்கலைக்கழகம் வரை கல்வியைக் கொள்ளை இலாபத் தனியார் கோலோச்சவும், அறநிறுவனங்கள் என்ற பெயரில் ஆர்.எஸ்.எஸ் போன்ற நிறுவனங்களிடம் ஒப்படைக்கவும் இத்திட்டம் வழி வகுக் கிறது. *(பத்தி 3.6)* முறைப் படியான ஆசிரியர்களுக்கு அப்பால் கல்விச் செயல் பாட்டா ளர்கள், தன்னார் வலர்களைக் கொண்டு கல்வி நிலையங்களில் பாடம் நடத்தவும் பயிற்சிதரவும் இத்திட்டம் வழிவகுக்கிறது. *(பத்தி 5.6, 5.7)* கல்லூரிகளில் முனைவர் பட்டம் பெறாமல், “சிறந்த கல்வியாளர்களாக” உள்ளவர்கள் பாடம் நடத்த *பத்தி 15.8* அனுமதிக்கிறது. இதில் ஆர்.எஸ்.எஸ்.காரர்களே வருவார்கள்.

மூன்றாம் வகுப்பிலிருந்து தாய் மொழி, ஆங்கிலம், இன்னொரு இந்திய மொழி கற்பிக்கப்பட வேண்டும் என்கிறது *(பத்தி 4.11)*. இதுதான் மும்மொழிக் கொள்கை. இன்னொரு இந்திய மொழி என்பதில் இந்திக்கு மட்டுமே வாய்ப் புள்ளது. இன்னொரு மொழி என்பது இந்தியின் முகமூடி! இன்னொரு இந்திய மொழியை ஏன் கற்க வேண்டும்?

எட்டாம் வகுப்பிலிருந்து சமற்கிருதம் கற்பதை ஊக்குவிக்க மாநில அரசுகள் சிறப்பு நிதி அளிக்க வேண்டும் என்று கூறுகிறது. *(பத்தி 4.16)* தாய்மொழியைப் பயிற்று மொழியாக (மீடியம் ஆக)க் கொண்ட வகுப்புகள் 5–ஆம் வகுப்பு வரை மட்டுமே சொல்லப் பட்டுள்ளது. தாய்மொழி (தமிழ்) பயிற்று மொழியாக இருப்பது விரும்பத்தக்கது என்று மட்டுமே கூறப்படுகிறது. கட்டாயம் அல்ல.

மூன்றாம் வகுப்புத் தொடங்கி 5,8,10,11,12 வகுப்புகளுக்கு அனைத்திந்தியத் தேர்வு! இந்திய அரசு நடத்தும் இத்தேர்வுகளில் வடநாட்டு மாணவர்கள் காப்பி அடித்தும், தில்லு முல்லு செய்தும் அதிக மதிப்பெண் வாங்க வாய்ப்பளிப்பார்கள். வேலைக்கான அனைத்திந்தியத் தேர்வுகளில் அதுதான் நடக்கிறது. எட்டாம் வகுப்பிலிருந்து தேர்வில் தோல்வியுற்றால், குறைந்த மதிப்பெண் வாங்கினால் தொழிற் கல்வி படிக்கப் போய்விட வேண்டும், குடும்பத் தொழில் கற்பது நல்லது என்று கூறப்பட்டுள்ளது. இது குலக் கல்வித் திட்டம்!

பல்கலைக் கழகங்களுக்கு இணைப்புக் கல்லூரிகள் கிடையாது. பல்கலைக்கான துணைவேந்தரை இந்திய அரசே அமர்த்தும். கல்லூரிகளின் மீதான அதிகாரம் இந்திய அரசிடமே!

மாணவர் சேர்க்கை, ஆசிரியர், பேராசிரியர் சேர்க்கை உள்ளிட்ட அனைத்திலும் இட ஒதுக்கீடு குறிப்பிடப்பட வில்லை.

இளங்கலைப் பட்டங்கள் 4 ஆண்டு படிப்பாகும். இடையில் தோல்வியுற்றால் அந்த ஆண்டோடு படிப்பை நிறுத்திக் கொள்ளலாம். அதற்கொரு டிப்ளமா தரப்படும்.

இளங்கலை – இளம் அறிவியல் பட்டப் படிபில் சேர அனைத்திந்திய நுழைவுத் தேர்வு நீட் போல் உண்டு! தமிழ்நாட்டு மாணவர்களின் கதி என்னவாகும் என்று இப்போதே புரிந்து கொள்ளலாம். அனைத்துத் தேர்வுக ளையும் தனியார் நிறுவனங்களே நடத்தும்! மாநில அரசு – கல்வி நிலையக் கட்டடங்களைப் பராமரிக்கும், சம்பளம் கொடுக்கும் அத்தோடு சரி! பிற அனைத்தையும் இந்திய ஆரியத்துவா அரசே நிர்வகிக்கும்!

புதிய கல்வித் திட்டம் குழந்தைகளுக்கும், மாணவர் களுக்கும் பாடச்சுமைகளை அதிகப்படுத்துகிறது. இது குழந்தை உளவியல், கல்வி உளவியல், இரண்டிற்கும் எதிரானது. ஒட்டுமொத்தமாக புதியக் கல்வித்திட்டம் தனி யார் கொள்ளைக்கு வாய்ப்பளிக்கும்; ஆரியமயம், வர்ணாசிரமம் இரண்டையும் வளர்க்கும்.

தமிழ்நாட்டில் சிலரும், சில கட்சிகளும் கூறுவது போல் மும்மொழித் திட்டத்தை மட்டும் எதிர்த்தால் போதாது; முற்றிலுமாகப் புதிய கல்வித்திட்டத்தைக் கைவிடப் போராட வேண்டும்!

**பெ. மணியரசன்**

தலைவர், தமிழ்த்தேசியப் பேரியக்கம்





# அக்கா என்னும் அம்மாவுக்கு வீரவணக்கம்!

எனது உடன்பிறந்த தமக்கை கு.பானுமதி என்கிற வான்மதி, எனக்கு ‘அக்கா என்னும் அம்மா’! அவர் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளுக்கும் மேலாக, தனக்காக வாழாமல் எனக்காக வாழ்ந்தவர்.

கடந்த 1072020 அன்று அவர் காய்ச்சலால் பாதிக்கப்பட்டார். தொடர்ந்து காய்ச்சல் இருந்ததால் 1772020 அன்று தனியார் மருத்துவமனையில் அனுமதிக் கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார். சிகிச்சை பலனின்றி 582020 காலை 1025 மணியளவில் காலமாகிவிட்டார்.

மீண்டு வந்துவிடுவார் என்று, வலுவான நம்பிக்கை யுடன் இருந்தேன். கடந்த ஜூலை 22ஆம் நாள் அவர் அனுமதிக்கப்பட்டிருந்த மருத்துவமனையின் அறைக் குள் நேரில் சென்று பார்த்தேன். என்னைக் கண்டதும் அவர் பதறித் துடித்தார். “நீ ஏன் இங்க வந்த? நீ பத்திரமாயிரு சாமி” என்று கையெடுத்துக் கும்பிட்டு “வெளியே போ, வெளியே போ“ என கதறினார். “எனக்கு சாவறதப் பத்தி பயமில்ல, ஒன்ன அம்போனு விட்டுட் டுப் போறேன், உன்னை யார் சாமி பாத்துக்குவாங்க? அதான் எனக்கு பெரிய கவலயா இருக்கு, ஒன்ன நம்பி சனங்க இருக்காங்க, நீ பத்திரமாக இரு, ரூம விட்டு ஒடனே வெளியே போ“ என்று அக்கா அலறித் துடித் தார். அதனால், அவருக்கு இருமல் கடுமையாகி, மூச்சுத் திணறல் ஏற்பட, நான் பதறிப்போய் அவரை அமைதிப்படுத்த முயன்றேன்.

நான் உடனிருக்கிறேன் என்பதை அறிந்தால் அவருக்குத் தெம்பாக இருக்குமென்று நம்பித்தான் உள்ளே சென்றேன். ஆனால், அவர் என்னைக் கண்ட தும் எனக்கு ஏதும் ஆகிவிடக்கூடாதே என பதைபதைத்துப் போனார். இரண்டே நிமிடங்களில் நான் வெளியேறி விட்டேன். பின்னர் அவர் ஆக்சிஜன் உதவியுடன் அமைதியான சுவாசத்துக்குத் திரும்பினார். தொடர்ந்து ஆக்சிஜன் பெற்றவாறே சிகிச்சையிலி ருந்தார். மருத்துவர்களும் நம்பிக்கையளித்தனர். மீண்டு வந்து விடுவார் என்று நம்பியிருந்தேன்.

உள்ளூர அக்காவைப் பற்றிய கவலை என்னை அரித்துக் கொண்டே இருந்தது. அக்காவோடு உடனி ருக்க இயலவில்லையே என்கிற குற்ற உணர்வு என்னை வதைத்தது. அதனை வெளிக்காட்டிக் கொள்ளாமல் இயக்கப்பணிகளில் இணையவழி நிகழ்வுகளில் பங்கேற்று வந்தேன்.

காலையில் பேரிடி என்னைத் தாக்கியது, மூளை சிதறியது போன்ற அதிர்ச்சி. மீளவியலாத துக்கத்தின் தாக்குதல். அக்காவை இழந்துவிட்டேன் என்பதை இன்னும் மனம் ஏற்கவில்லை.

அக்கா இளம் வயதிலேயே கணவரை இழந்தவர். சின்னஞ்சிறு வயதில் மூன்று பிள்ளைகள். இல்லற வாழ்வில் அவர்கண்ட துன்பங்கள் விவரிக்க இயலாதவை. நான் என்னை பொதுவாழ்வில் ஒப்படைத்துக் கொண்டு நாடு முழுவதும் சுற்றி அலைந்ததையும் ஓட்டல்களிலேயே தொடர்ந்து சாப்பிடுவதையும் எண்ணி வருந்தி, எனக்குத் துணையாயிருக்க வேண்டுமென் 90களின் தொடக்கத்தில் சென்னைக்கு வந்து தங்கினார். எனது உடைகளைத் துவைப்பதும் நான் சென்னையில் தங்கும் நாட்களில் எனக்கு உணவு சமைப்பதும் தான் அக்காவுக்கு ஒரே வேலை.

ஒருநாளும் எதற்காகவும் அவர் முகம் சுளித்ததில்லை, எவரையும் கடிந்து கொண்டதில்லை. எதுவும் வேண்டுமென எந்நிலையிலும் கேட்டதில்லை. "தயவு செய்து கல்யாணம் பண்ணிக்கோ தம்பி, அம்மா சதா உன்னை நினைத்து அழுது கொண்டே இருக்காங்க" என்பது மட்டுமே அவரது வழக்கமான ஒரே கோரிக்கை.

கட்சியின் தலைமை அலுவலகத்துக்கு நான் வரும்போது தகவலறிந்து, அங்கே வந்து கும்பல்சூழ பரபரப்பாயிருக்கும் என்னைத் தூரமாய் நின்று பார்த்துவிட்டுப் போய்விடுவார். கால்நூற்றாண்டாய் எனக்காக வாழ்ந்த அக்காவைப் பாதுகாக்கத் தவறிவிட்டேனே என்கிற குற்ற உணர்வு நெஞ்சை நெருப்பாய்ச் சுடுகிறது.

"இத்தனை ஆண்டுகளில் ஒருநாள்கூட என்னோடு இந்த வீட்டில் நீ தங்கியதில்லை. கொரோனா நெருக்கடியில் எங்கேயும் வெளியே போகாதே, இப்போதாவது என்னோடு இரு சாமி" என்று என்னிடத்தில் மார்ச் 25 அன்று கெஞ்சிக் கேட்டார்.

"இங்கே இருந்தால் என்னைப் பார்க்க தினம் கூட்டம் வரும், நான் வெளியில் தங்கிக் கொள்கிறேன்" என்று அவர் பேச்சை மீறிவிட்டு புதுவைப் பகுதிக்கு வந்து விட்டேன். அக்காவின் அந்த ஆசையைக்கூட நிறைவேற்ற இயலாதவனாகிவிட்டேனே என்று குமைகிறது நெஞ்சம்.

அம்மாவை எப்படித் தேற்றுவேன்? என்கிற பெருங்கவலையோடு அங்கனூர் சென்றேன். அக்கா இறந்ததை அம்மாவிடம் சொல்லாமல் "சீரியசா இருக்கு" என்று சொன்னதற்கே அவர் பதறித் துடித்திருக்கிறார். மயக்கமடைந்துவிட்டார். அம்மாவை அருகிலுள்ள மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

அக்காவின் விருப்பப்படி அப்பா அடக்கம் செய்யப்பட்ட இடத்தருகே அங்கனூரில் அடக்கம் செய்திருக்கிறோம்.

"எல்லோரும் கவனமாயிருங்கள், கொரோனா கொடியது" என்று ஒவ்வொரு நாளும் முகநூல் நேரலையில் கெஞ்சுவேன். ஆனால், அக்காவைப் பற்றி கவனமில்லாமல் இருந்துவிட்டேனே. என்னை என்னால் ஆற்றுப்படுத்த இயலவில்லை. மீண்டும் வேண்டுகிறேன்,எச்சரிக்கையாய் இருங்கள் 'கொரோனா கொடியது"!

ஆற்றாமையும் வெறுமையும் என்னை ஆக்கிரமித்துக் கொண்டு ஆட்டிவைக்கிறது. அக்கா கவலைப்பட்டது போல இப்போது நான் தனித்துவிடப்பட்ட உணர்வுக்குத் தள்ளப்பட்டிருக்கிறேன்.

இந்தப் பெருந்துயரில் நான் வீழ்ந்துழலும் நிலையிலும் அக்காவைக் காப்பாற்றுவதற்காக உயிரைப் பணயம் வைத்து, பெற்ற பிள்ளையைப் போல உடனிருந்து கவனித்துக் கொண்ட குடும்ப மருத்துவர் அனுரத்னா அவர்கள் உள்ளிட்ட, அம்மருத்துவமனையைச் சார்ந்த இதர மருத்துவர்கள், செவிலியர்கள், சுகாதாரப் பணியாளர்கள் ஆகிய அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியை உரித்தாக்குகிறேன்.

எனது தமக்கையாக மட்டுமின்றி விடுதலைச் சிறுத்தையாகவும் வாழ்ந்த அவர், தென்சென்னை மாவட்ட மகளிரணியில் சிலகாலம் மாவட்டத் துணைச் செயலாளராக பொறுப்பேற்று பணியாற்றியவர். கட்சியின் மாநாடுகள், பேரணிகள், இயக்கத் தோழர்களின் இல்ல நிகழ்ச்சிகள் போன்றவற்றில் தொடர்ந்து தவறாமல் பங்கேற்றவர்.

எனக்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்ட அக்கா என்னும் அம்மாவுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக்குகிறேன்.

இயன்றவகையில் மக்கள் பணியிலும் பங்கேற்ற வான்மதி என்னும் விடுதலைச்சிறுத்தைக்கு கட்சியின் சார்பில் எனது செம்மாந்த வீரவணக்கத்தைச் செலுத்துகிறேன்.

இவண்,

தொல்.திருமாவளவன்,

நிறுவனர் தலைவர், விசிக.


**விளம்பரக் கட்டண விபரம்**

| | | |
|---|---|---|
| **முன்னட்டை உள்ளே (முழுப்பக்கம்)** | **ரூ.** | 10,000/- |
| **பின்னட்டை உள்ளே (முழுப்பக்கம்)** | **ரூ.** | 10,000/- |
| **பின்னட்டை (முழுப்பக்கம்)** | **ரூ.** | 15,000/- |
| **கருப்புவெள்ளை** | **ரூ.** | 5,000/- |

# போலியான ஜனநாயகம்

இந்தியா வெள்ளையரிடம் சுதந்திரம் பெற்ற நாளிலிருந்தே, இந்திய அதிகாரிகள் அமைப்பு (Bureaucracy) ஆரியச் சார்புடையதாகத்தான் இருந்து வந்தது. இன்று அது தனது ஆரியச் சார்பை வெளிப் படையாகக் காட்டிக்கொள்கிறது. தேர்தலில் தேர்ந் தெடுக்கப்படும் அரசியல் தலைவர்களை விட அவர்களை அவர்கள் வழியில் செயல்படவிடாமல் தமது கூட்டத்தின் விருப்பத்திற்கு ஏற்ப அரசியல் தலைவர்களை வளைத்துக்கொள்ளும் அதிகாரிகள் வர்க்கம்தான் (Bureaucracy) உண்மையான அதிகார மையமாகும். மக்கள் இந்த அதிகார வர்க்கத்தைத் தமது கட்டுக்குள் வைத்திருக்கும்போதுதான் உண்மையான மக்களாட்சி மலரும். மக்கள் நலன் காக்கப்படும்.

இந்த அதிகாரிகளைப் பற்றி வேலண்டைன் சிரோல் என்ற தனது நூலில் குறிப்பிடும்போது ஆங்கில அரசின் உயர்பதவிகளில் பிராமணர்கள் மிகப் பெருமளவில் இருந்தாலும், ஆங்கிலேயர் ஆட்சி கவிழ்ந்து தங்களுடைய ஆட்சி மீளவந்து தங்கள் ஆதிக்கம் நிலைபெறுவதையே விரும்புகிறார்கள் என்று கூறுகிறார். (“Of the higher appointments held by natives of the Presidency of Bombay, the last census tells us that the Hindus held 266 against 86 held by Parsees and 23 held by Mahomedans, and that out of those held by the Hindus, more than 72 per cent were held by Brahmans, though the Brahmans form less than one-fourteenth of the total Hindu population of the province. … Amongst Chitbavans are to be found many of the most enlightened and progressive Indians of our times and many have served the British Raj with unquestioned loyalty and integrity. But among many others - perhaps indeed the amongst the great majority - there has undoubtedly been preserved for the last hundred years from the time of the downfall of the Peshwa dominion to the present day, an unbroken tradition of hatred towards British rule, an undying hope that it might some day be subverted and their own ascendancy restored.” ( Page 38 - Indian Unrest - 1910).

அதாவது, வெள்ளையராட்சியைக் கவிழ்த்து விட்டு (subverted) பேஷ்வா ஆட்சிக்கால பிராமண வல்லாட் சியைக் கொண்டுவந்து அதன்மூலம் பிராமணர்களின் மேல்நிலை பெறவேண்டும் என்று ஏங்கினர். இதைத்தான் சித்பவன் பிராமணரான கோபால் ஹரி தேஷ்முக் கூட தனது நேரடி சாட்சிய மாகக் கூறு கிறார். (பார்க்க: https://vaeyurutholi bangan.blogspot. com/…/sanskrit-learning…)

அந்தக் கனவைத்தான் இன்று 2020ல் அவர்கள் நனவாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

அதனால்தான், பாராளுமன்றக் குழுக்களுக்குச் சென்று ஆய்வு செய்யப்பட வேண்டிய சட்ட முன் மொழிவுகள் எல்லாம் நேரடியாக, சரியான விவாதம் இல்லாமல், சட்டங்களாகிக் கொண்டிருக்கின்றன. அறங்கூறாயங்கள் வளைக்கப்படுகின்றன. தாழ்த்தப்பட்ட,



*பிற்படுத்தப்பட்ட மற்றும் சிறுபான்மை இனத் தவர்கள் நீதித்துறையில் உரிய பங்கைப் பெறுவதில்லை.*

*இதே உலகத்தில்தான் ஸ்விட்சர்லாந்து என்ற நாடும் இருக்கிறது. அங்கே, நான்கு மொழி பேசும் மக்கள் இருக்கிறார்கள். 70% ஜெர்மன், 23% பிரெஞ்ச், 6% இத்தாலியன், 0.7% ரொமான்ஷ் மக்கள். இத்தாலியன், ஃபிரெஞ்ச் மற்றும் ஜெர்மன் ஆகிய மூன்றும் மத்திய அரசின் ஆட்சிமொழிகள். இந்தியா வைப் போல 40% இந்தியை தகிடுதிருத்தம் செய்து ஒரே ஆட்சிமொழியாக ஆக்கிக்கொள்ளவில்லை. 2006ஆம் ஆண்டு நீதித்துறைக்குழு அங்குள்ள உச்சநீதிமன்றத் திற்கு நீதிபதிகளைத் தேர்ந்தெடுப்பது பற்றி ஆய்வறிக்கை கொடுத்தது. அதன்படி, நீதிபதி நியமனத்தில் அனைத்து மொழிகளுக்கும் போதுமான பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டும் என்று அந்த அறிக்கை கூறியது.* (Benjamin Suter - Page 283 - (2015) 46 VUWLR - Victoria University of Wellington Law Review). *2014ஆம் ஆண்டு நிலவரப்படி ஸ்விட்சர்லாந்தின் உச்சநீதிமன்றில் இருக்கும் 38 முழுநேர நீதிபதிகளில் 23 பேர் ஜெர்மன் பேசுவோராகவும், 12 பேர் ஃப்ரெஞ்ச் பேசுவோராகவும் 3 பேர் இத்தாலிய மொழி பேசு வோராகவும் இருந்தனர். அவ்வப்போது, ரொமான்ஷ் பேசுவோரிலும் நீதிபதிகள் நியமிக்கப்படு கின்றனர்.*

*தென் ஆப்பிரிக்காவின் அரசியல் சட்டத்தில் நீதிபதிகள் அமைப்பில் அனைத்து இனங்களும் பிரதி பலிக்கவேண்டும் என்று தெளிவாக்கப்பட்டுள்ளது.*

(“Sec. 174 (2): The need for the judiciary to reflect broadly the racial and gender composition of South Africa must be considered when judicial officers are appointed”. -Constitution of the post-apartheid South Africa stressing on appropriate demographic representation in the judiciary).

*ஆனால் இந்திய அதிகாரிகள் வர்க்கத்திற்கு அதெல்லாம் பிடிப்பதில்லை. உண்மையான ஜனநாயகம் என்பது பிராமண வல்லாதிக்கத்தை நிலைநிறுத்த உதவாதல்லவா? அவர்களுக்குத் தேவை பிராமணர் நலன் தானே தவிரப் பிறர் நலன் அல்லவே? எனவே தான், ஜனநாயகத்தின் எதிர்த்திசையில் நாட்டைக் கொண்டுசெல்ல இன்றைய ஆட்சியாளர்கள் எல்லாவிதமான செயல்களையும் வெளிப்படையாகவும் உள்குத்தாகவும் செய்துகொண்டிருக்கிறார்கள்.*

*இவர்களின் உண்மை உருவத்தை மக்களிடம் தெரியப்படுத்துவது கடமையாகும்.*

(I, for one, believe that if you give people a thorough understanding of what confronts them and the basic causes that produce it, they’ll create their own program, and when the people create a program, you get action.” -Malcolm X).

*வழக்கறிஞர்* **வேயுறுதோளிபங்கன்.**

### இந்தி பேசினால்தான் இந்தியரா?

நீங்கள் ஓர் இந்தியரா? சென்னை விமான நிலையத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழியிடம் ஒன்றியத் தொழிலகக் காவல் படையைச் (சிஐஎஸ்எஃப்) சேர்ந்த ஒரு காவலர் இப்படிக் கேட்டிருக்கிறார். காரணம் கனிமொழிக்கு இந்தி தெரியவில்லை. இந்தச் சம்பவம் ஒரு பழைய விவாதத்தை மீண்டும் பொதுத்தளத்துக்குக் கொண்டுவந்திருக்கிறது. அந்தக் காவலர் மீது துறை சார்ந்த நடவடிக்கை எடுக்க வேண்டாம் என்று கனிமொழி கேட்டுக்கொண்டிருக்கிறார். இது சரியானதுதான். ஒரு காவலரை மட்டும் குற்றப்படுத்துவது பிரச்சினைக்குத் தீர்வாக இராது. இந்தி பேசும் சிலரிடத்திலேனும் அப்படியான ஒரு கேள்வி தொக்கிக்கொண்டுதான் நிற்கிறது. தமிழர்கள் பலர் தமிழகத் துக்கு வெளியே இந்தக் கேள்வியை எதிர்கொண்டிருப் பார்கள். என்னுடைய அனுபவங்கள் இரண்டைச் சொல்கிறேன்.

### இரண்டு சம்பவங்கள்

முதல் சம்பவம் இருபதாண்டுகளுக்கு முன்பு நடந்தது. ஹாங்காங்கில் மாங்காக் என்கிற மெட்ரோ ரயில் நிலையத்துக்கு அருகிலுள்ள நடைபாதையில் எதிர்ப்பட்ட என்னிடம், ‘சுங் கிங் மேன்ஷனுக்கு எப்படிப் போக வேண்டும்?’ என்று அவர் இந்தியில் கேட்டார். எனக்குக் கேள்வி புரிந்தது. அவர் சுற்றுலாப் பயணி என்பதும் புரிந்தது. எனக்குப் பதிலும் தெரிந்திருந்தது. அவர் விசாரித்த வணிக வளாகம் பல்வேறு தேசிய இனங்கள், குறிப் பாகத் தெற்காசியர்களும் ஆப்பிரிக்கர்களும் கூடுமிடம். அவர் கேள்விகேட்ட இடத்திலிருந்து மெட்ரோ ரயிலைவிடப் பேருந்தில் போவதுதான் சுலபமானது. நான் அவருக்கு உதவ விரும்பி னேன். ஆனால், அதை என்னால் ஆங்கிலத்தில்தான் சொல்ல முடியும். அதை அவரிடம் தெரிவித்தேன். இப்போது காவலர் கனிமொழியிடம் கேட்ட அதே கேள்வியைச் சுற்றுலாப் பயணி என்னிடம் கேட்டார். ஹாங்காங்கில் பல்வேறு நாட்டினர் வசிக்கி றார்கள். இலங்கை, வங்க தேசம் போன்ற தெற்காசிய நாட்டின ருக்கும் இந்தியர்களுக்கும் உருவ ஒற்றுமை இருக்கும். என்னை அப்படியான அண்டை நாட்டுக் குடிமகன் என்று கருதியிருக் கலாம். நான் அக்மார்க் இந்தியன்தான் என்று பதிலளித்தேன். அவர் எனது பதிலில் அதிருப்தியுற்றிருப்பார்போல. என்னுடைய கடவுச்சீட்டில் நான் ஓர் இந்தியக் குடிமகன் என்று குடியரசுத் தலைவரே சான்றளித்திருக்கிறார். நண்பருக்கு அது பொருட் டில்லை. அவர் இரண்டாவது முறையாகக் காவலர் கேட்ட கேள் வியை என்னிடம் கேட்கவில்லை. ஆனால் அது அவரது முகத் தில் அழியாமல் தேங்கியிருந்தது. என்னுடைய ஆலோசனைக் குக் காத்திருக்காமல் அவர் மெட்ரோ ரயில் நிலையத்தை நோக்கி நடந்தார்.

இரண்டாவது சம்பவமும் ஹாங்காங்கில் நடந்ததுதான். ஐந்தாண்டுகள் இருக்கும். ஒரு வெளிநாட்டு இந்தியர், தொழில திபர், இந்தியக் கட்டுமானத்தில் முதலீடு செய்ய விரும்பினார். ஹாங்காங்கின் நவீனக் கட்டுமான முறைகளைப் பார்வையிட வந்திருந்தார். அவருக்கு ஆலோசனை வழங்கிய நிறுவனம் ஒரு கலந்துரையாடலுக்கு ஏற்பாடு செய்திருந்தது. கூட்டத்துக்கு நானும் அழைக்கப்பட்டிருந்தேன். ஹாங்காங்கில் கட்டுமானத் துறையில் கட்டுப்பாடுகள் அதிகம். அதைப் பற்றித் தொழிலதிபர் கேட்டார். நான் பதில் சொன்னேன். அவர் உரையாடலை இந்தி யில் நீட்டித்தார். நான் தணிந்த குரலில், “நாம் ஆங்கிலத்தில் பேசுவோம்” என்றேன். அந்த அறையில் அவரது உதவியாளர் களையும் என்னையும் தவிர இரண்டு சீனர்களும் ஓர் ஆங்கிலே யரும் இருந்தனர். “அவர்கள் பொருட்படுத்த மாட்டார்கள்” என்று தொழிலதிபர் பதிலளித்தார். நான், “எனக்கும் இந்தி தெரியாது” என்று சொன்னேன். தொழிலதிபர் ஆங்கிலத்துக்கு மாறிக் கொண்டார். அதற்கு முன் என்னை ஒரு பார்வை பார்த்தார். அந்தப் பார்வையில் காவலர் கனிமொழியிடம் கேட்ட கேள்வி இருந்தது. அப்படித்தான் நினைக்கிறேன்.

நன்றி : தமிழ் இந்து – மு.இராமனாதன், ஹாங்காங்கின் பதிவு பெற்ற பொறியாளர்.

# பொய்க்கதைகள்!



பிரபாகரன் கொலையாளி, பிரபாகரன் வன்முறையாளன், பிரபாகரன் போராளியை நஞ்சு வைத்துக் கொன்றார் என்றெல்லாம் அலப்பறைகள் எழுந்து பரவுகின்றன. தமிழகத்தின் சிலதரப்புகளும், அவர்களோடு கைகோர்த்த இலங்கைத்திரு நாட்டின் முத்து மணிகளும் இந்தத் தகவலை வலைத்தளங்களில் ஆசை ஆசையாக் கொண்டோடித்திரிகிறார்கள்.

நந்திக் கடலில் நடந்த இறுதிப்போர் பற்றி எழுதிய கமால்குணரட்ண, "தனது கட்டளைக்காகச் சண்டையிடவென்று, மனவுறுதி தளராத போராளிகளை எவ்வாறு பிரபாகரன் உருவாக்கியிருப்பார்.."என்று அடிக்கடி சிந்தித்து வியந்ததுண்டு என்று குறிப்பிடுகிறார். சரி, அது கிடக்கட்டும்.

துறவு என்பது வெறுமனே குடும்பத்தை விட்டு தனித்து அலைவதோ அன்றி பிச்சையெடுத்துக் கொண்டு கோவில் கோவிலாகச் சுற்றுவதோ அல்ல. துறவு என்பதும் ஓர்வகை அறமே. பிறருக்காக தன்னை அர்ப்பணிப்பதும் துறவு நிலையே. புத்தரும் இயேசுவும் செய்தது துறவறம். துறவியாக விரும்புகின்ற சாதாரண மனிதன். தன் இளம்பருவம், குடும்பப்பருவம் இரண்டையும் ஒழுக்கத்துடனும் நேர்மையுடனும் வாழ்ந்திருக்க வேண்டுமென்கிறார் கன்பூசியஸ். அவ்வாறே தமிழினத்தில் பிறந்து, தன்னை முழுமையாகத் தமிழினத்திற்கே அர்ப்பணித்தவர் பிரபாகரன். அவரிடம் அறமற்ற செயல்களை ஒருபோதும் காணமுடியாது.

ஆனையிறவை அழிப்பதற்கான முதல் எத்தனிப்பான 1991 ஆ.க.வெ.சமரின் ஒரு கட்டத்தில், ஆனையிறவை வீழ்ச்சியிலிருந்து காப்பாற்ற கட்டைக்காடு பகுதியில் தரையிறங்கிய இராணுவம் வெற்றிலைக் கேணி நோக்கி முன்னேறி ஒரு இணைப்பை ஏற்படுத் திக் கொள்ள, சண்டை இறுகிப்போன வேளையில், வேவுப்புலிகளால் தலைவரிடம் ஓர் கோரிக்கை விடப்பட்டது. நிலைகொண்டிருக்கும் இராணுவத்தை ஒட்டுமொத்தமாக அழிக்க ஒரே வழி, இராணுவம் உபயோகிக்குக் குடிநீர்த்தாங்கி மற்றும் கிணறுகளில் நஞ்சைக் கலந்துவிடலாம் என்பதுவே அந்தக் கோரிக்கை.

656 போராளிகளை இழந்து, சண்டை கைவிடப்பட வேண்டிய நிலையிலும் தலைவர் அவ்வழியை அனுமதிக்கவில்லை. அதைவிட நீங்கள் சண்டையைக் கைவிட்டுட்டுத் திரும்பலாம்" என்பதுவே அவரது பதிலாக இருந்ததாம்.

முல்லைத்தீவு, பலாலி, பூநகரி, வவுனியா, அநுராதபுரம் போன்ற பாரிய இராணுவத்தளங்களில் பகலிரவாகத் திரிந்து, இராணுவத்துடனேயே உணவருந்தி, அந்த முகாமிற்குள்ளேயே மாதக்கணக் கில் கிடந்து வேவுத்தகவல் சேகரித்துவரும் வேவுப்புலிகள் அங்கிருக்கும் உணவிலோ அன்றிக் குடிநீரிலோ நஞ்சைக் கலந்து விட எவ்வளவு நேரம் ஆகும்?

எவ்வளவு வேவு, திட்டங்கள், அர்ப்பணிப்புகள், தியாகங்கள், எல்லாவுற்றையும் அப்படியே ஓரம் கட்டி வைத்துவிட்டு, ஓர் நஞ்சுப்போத்தலோடு ஒவ்வொரு இராணுவமுகாமிற்குள்ளும் வேவுப்புலிகளை அனுப்பியிருந்தால்? தமிழீழத்தை 1990லேயே நாம் அடைந்திருக்கலாம்.

அடுத்த வன்ர சொத்தில வாழுறவன், சோற்றுக்கு வழியில்லாமல் ஒண்ணடிப்பிழைக்கிறவன். எங்கேயோ இருந்து வந்தவனை தமிழினத்தலைவன் என்பவன், குடும்பவழி அரசியல் நடாத்தித்திரிபவன், வரலாற்றைத் திரித்துக் கதை எழுதுறவன், எல்லாருமே வேண்டுமென்றால் பக்கம்பக்கமாகப் பொய்க்கதை எழுதிப்பெயர் வாங்க முயற்சிக்கலாம்.

ஆனால் எவனாலும் ஒருபோதும் பிரபாகரனாக முடியாதப்பு....!

தேவன்.

# பிரசாந்த் பூஷண் மீதான வழக்கு

உச்ச நீதிமன்றத்தின் ஊழல் நீதிபதிகளுக்கு பிரசாந்த் பூஷண் எப்போதுமே ஒரு சிம்ம சொப்பன மாகத்தான் இருந்து வந்துள்ளார்!

தந்தை சாந்திபூஷண் வழியில் கடந்த முப்பது ஆண்டுகளாக நீதித் துறையில் வெளிப்படைத்தன்மை மற்றும் நேர்மையை உத்தரவாதப்படுத்த அயராது பாடுபட்டு வருபவர் பிரசாந்த்பூசண்.

இவர் மீது நீதிமன்ற அவமதிப்பு குற்றம் சாட்டப் பட்டுள்ளது! மூன்று நீதிபதிகள் அமர்வு இதை விசாரிக்கிறது. இதற்கு அவருடைய இரண்டு டிவிட்டர் பதிவுகள் காரணம்.

நான் எமர்ஜென்சி காலத்தில் இருந்து உச்ச நீதிமன் றச் செயல்பாடுகளைப் பார்க்கிறேன்! தற்போது நமது நீதித் துறை அரசிடம் சரணாகதி அடைந்ததைப் போல எந்தக் காலத்திலுமே நடந்ததில்லை. பெரும் பாலான நீதிபதிகள் அரசியல் சட்டத்தையும், மக்களின் அடிப்படை உரிமைகளையும் பாதுகாப்போம் என்று கூறி உறுதிமொழி எடுத்ததை முற்றிலும் மறந்துவிட்ட னர்.

இந்தியாவின் சமீபத்திய ஆறாண்டுகளை வருங் கால வரலாற்று அராய்ச்சியாளர்கள் யாரேனும் ஆய்வு செய்யும்போது இந்தக் காலகட்டத்தில் ஜனநாகம் சிதைக்கப்பட்டது போல எமர்ஜென்சி காலத்தில் கூட நடக்கவில்லை எனச் சொல்வார்கள்! அதுவும் ஜனநாய கத்தைக் காப்பாற்றும் விஷயத்தில் சுப்ரீம் கோர்ட்டே முடங்கி இருக்கிறது. அதிலும் குறிப்பாகக் கடைசியாகப் பொறுப்புக்கு வந்த நான்கு தலைமை நீதிபதிகளின் செயல்பாடு கடும் விமர்சனத்திற்குரியது.

இந்தக் கருத்து ஜனநாயகத்தை நேசிப்பவர்கள் மத்தியில் மாபெரும் வரவேற்பு பெற்றது! காரணம் அவர் கூறிய ரஞ்சன் கோகாய், தீபக் மிஸ்ரா, ஜெகதீஸ் சிங் கேகர் மற்றும் தற்போதைய நீதிபதி எஸ்.ஏ.பாப்டே ஆகியோரின் செயல்பாடுகள் மக்கள் பார்த்து நொத்தது தான்.

ஏற்கனவே பூஷண், "இது வரையிலான சுப்ரீம் கோர்ட் தலைமை நீதிபதிகளில் சமார் 16 பேர் ஊழல் கறை படிந்தவர்கள்" என்று கூறியது சர்ச்சையானதை நினைவு கூர்கிறேன்! அப்போது கிருஷ்ண ஐயர் அவர்கள் "பிரசாந்த் பூஷண் கூறியிருப்பது தொடர்பாக ஒரு தனி விசாரணை நடத்தி உண்மையை நாட்டு மக்களுக்குச் சொல்ல வேண்டும்" என்று கூறி ஆதரித்தது கவனத்திற்குரியது.

இப்படிச் சொல்வதற்கான துணிச்சல் பிரசாந்த பூஷண் ஒரு நேர்மையாளராக நெருப்பைப் போல் வாழ்வதால் வருகிறது. மிகவும் எளிமையான வாழ்க்கை வாழும் பிரசாந்த் பூஷண் இதுவரை பல நூறு பொது நல வழக்குகளை மக்களுக்காக நடத்தியவர்! அவர் தன்



**சமீப காலமாக நமது நீதிமன்றங்கள் அரசின் செயல்பாடுகள் பலவற்றை மக்கள் நலன் பாராமல் ஆதரித்து வருவது தொடர்பாக நம் அனைவருக்குமே கடும் மன வருத்தம் இருக்கிறது.**

வழக்கறிஞர் தொழிலில் 75விழுக்காடு பணம் வாங்காத வழக்கிலும், 25விழுக்காடு மட்டுமே கட்டணம் பெற்றும் வாதாடுகிறார். அதுவும் பாதிக்கப்பட்டவர் நேர்மையானவர் என்பதை நன்கு உறுதிப்படுத்திக் கொண்டே ஆஜராவார்!

இந்தியாவில் மக்கள் குறை கேட்பு ஆணைய உருவாக்கத்திலும், ஊழலை ஒழிக்கக் கொண்டு வரப் பட்ட 'ஜன்லோக் பால் மசோதா' உருவாக்கத்திலும் பூஷண் பங்கு குறிப்பிடத்தக்கது. நீதிபதிகள் தகவல் உரிமைச் சட்டத்தின் கீழ் வர வேண்டும், தங்கள் சொத்து விவரங்களைப் பதவி ஏற்புக்கு முன்னும், பதவிக்கு வந்த பின்னும் தெரியப்படுத்த வேண்டும் என்ற வழக்கில் ஆஜராகி வென்றவர்.

சமீப காலமாக நமது நீதிமன்றங்கள் அரசின் செயல்பாடுகள் பலவற்றை மக்கள் நலன் பாராமல் ஆதரித்து வருவது தொடர்பாக நம் அனைவருக்குமே கடும் மன வருத்தம் இருக்கிறது. கொரோனா காலத்தில் டாஸ்மாக் திறக்க அனுமதித்தது தொடங்கி ராஜஸ் தான் எம்.எல்.ஏ க்களை சபாநாயகர் தகுதி நீக்கம் செய்ததில் தலையிட்டது வரை அனைவரும் பார்த்து வருகிறோம்.

அரசியல் சீரழிந்திருந்தாலும் கூட நீதித்துறை நேர்மையாக இருந்தால் அது ஓரளவு குறைந்தபட்ச நிம்மதியை நமக்கு ஏற்படுத்தும். ஆனால், அதுவும் சறுக்கும்போது மக்கள் மன்றத்தில் இருந்து இப்படி யான விமர்சனங்கள் வருவது தவிர்க்க முடியாது.

பிரசாந்த் பூஷணுக்கு இந்தியா முழுமையிலும் உள்ள ஜனநாயக சக்திகள் தங்கள் ஆதரவை வெளிப் படுத்தி வருகின்றனர். இந்த வழக்கு வெளிப்படையாக மக்கள் பார்க்கும் வண்ணம் தொலைக்காட்சிகளில் நேரடி ஒளிபரப்புச் செய்யத்தக்க வகையில் நடக்க வேண்டும் என்ற வேண்டுகோளும் சமூக ஆர்வலர் களிடம் வெளிப்பட்டுள்ளது.

பிரசாந்த் பூஷணை முன்னாள் நீதிபதிகள் செல்ல மேஸ்வரர், ராம் பால், கோபால கெளடா, கங்குலி உள்ளிட்ட ஏழு பேரும், ஏராளமான வழக்கறிஞர் களும் ஆதரித்து உள்ளனர்! பத்திரிகையாளர்கள் அருண்ஷோரியும், என்.ராமும் ஆதரித்துள்ளனர். நாமும் வலுவாக ஆதரிப்போம்.

***சாவித்திரி கண்ணன்.***

# உடல் நலம்!




உடலை ஆரோக்கியமாக வைத்துக்கொள்ள பல எளிய வழிகள் உள்ளன. அந்த எளிமையான வழிகள் பற்றி பலருக்கும் தெரியாமல் இருப்பதால் உடலுக்குத் தீங்கு விளைவிக்கும் செயல்களைப் பின்பற்றி வருகின்றனர். உதாரணமாக தூக்கத்தைப் போக்க ஆரோக்கியமற்ற காஃபின் நிறைந்த காபியைக் குடிப்போம். ஆனால் ஒரு ஆப்பிள் சாப்பிட்டால் தூக்கம் கலைந்து விடும் என்பது தெரியாது.

1. ஒரு மாதம் தொடர்ந்து தினமும் 20-25 நிமிடம் ஓடினால் கட்டாயம், ஆரோக்கியமான வழியில் ஒரு கிலோ உடல் எடையைக் குறைக்கலாம்.

2. தினமும் காலையில் உடற்பயிற்சி செய்து அன்றைய தினத்தை ஆரம்பித்தால், நாள் முழுவதும் சோர்வின்றி சுறுசுறுப்புடனும், ஸ்மார்ட்டாகவும் செயல்பட முடியும்.

3. புகை பிடிப்பவர்கள் தினமும் பால் டீக்குப் பதிலாக, பிளாக் டீ குடித்து வந்தால், நுரையீரல் பாதிக்கப்படுவதை ஓரளவு தடுக்கலாம்.

4. தூங்கும் முன் உடற்பயிற்சியைச் செய்தால், உடலில் தேங்கியுள்ள தேவையற்ற கொழுப்புகள் எரிக்கும் செயல் முறையை அதிகரிக்கலாம்.

5. வீட்டுச் சாப்பாடு சாப்பிடுபவர்கள், ஹோட்டலில் அதிகம் சாப்பிடுபவர்களைவிட சில ஆண்டுகள் அதிகமாக வாழ் கின்றனர். எனவே ஓட்டலில் அதிகம் சாப்பிடுவதைத் தவிர்த்து, வீட்டில் சமைத்துச் சாப்பிடுங்கள்.

6. காலையில் எழுந்ததும் சுறுசுறுப்புடன் செயல்படுவ தற்கு காஃபின் நிறைந்த காபி அல்லது டீ குடிப்பதைவிட குளிர்ச்சியான தண்ணீரைக் குடிப்பது மிகவும் சிறந்தது.

7. ஒருவர் ஒரு நாளைக்கு 9 மணிநேரத்திற்கு மேல் தூங்கினால், நோயெதிர்ப்பு மண்டலம் பாதிக்கப்படும். எனவே தினமும் ஏழு, எட்டு மணி நேரத்திற்கு மேல் தூங்கும் பழக்கத்தைக் கைவிடுங்கள்.

# பித்தப்பையைக் காப்போம்!!

நமது கல்லீரல் மற்றும் சிறுகுடலுக்கு பாலமாகச் செயல்படுவது தான் பித்தப்பை. இந்த பித்தப்பை தான் செரிமான அமைப்பின் மிக முக்கியமான பகுதியாகும். பித்தப்பை என்பது கல்லீரலால் உற்பத்தி செய்யப்படும் பித்தத்தை சேமிக்கும் ஒரு சிறிய சாக் (இது கல்லீரலின் கீழ் உள்ளது). இது பார்ப்பதற்கு ஒரு சிறிய பேரிக்காய் போன்று காணப்படும்.

நமது உடல் ஆரோக்கியமாக இருக்க வேண்டும் என்றால் பித்தப்பையின் செயல்பாடும் ஆரோக்கிய மாக இருக்க வேண்டும். இந்த பித்தப்பையின் ஆரோக் கியம் நாம் சாப்பிடும் உணவைப் பொறுத்தே அமைகி றது. எனவே தவறான உணவுப் பழக்கத்தால் பித் தப்பையில் ஏராளமான பிரச்சனைகள் ஏற்படுகிறது. அதைப் பற்றி கீழே காணலாம்.

இந்த பித்தப்பையில் தவறான உணவுப் பழக்கத் தால் பித்தப்பையில் படிக கற்கள் உண்டாகின்றன. இந்த பித்தக்கற்கள் சில நேரங்களில் நமக்கு நிறைய சிக்கல்களை ஏற்படுத்தும். பொதுவாக, தாங்க முடியாத வயிற்று வலி மற்றும் முதுகுவலி, குமட்டல் அல்லது வீக்கம் போன்ற பிரச்சினைகளை உண்டாக்கும். இந்த பித்தப்பை கற்களை சில நேரங்களில் மருந்துகளால் குணப்படுத்த முடியும். இல்லையென்றால் அறுவை சிகிச்சை செய்தாக வேண்டும்.

கோலிசிஸ்டிடிஸ் என்பது பித்தப்பை அழற்சி எனப்படுகிறது. நம் பித்தப்பையில் ஏற்படும் வீக்கம் மற்றும் எரிச்சல் காரணமாக ஏற்படுகிறது. இது பித் தப்பை நோய்த் தொற்று என்றும் அழைக்கப் படுகிறது. கோலிசிஸ்டிடிஸ் கடுமையான வலி மற்றும் காய்ச்சலை ஏற்படுத்துகிறது. நோய்த் தொற்று நீண்ட காலமாக நீடித்தால், அறுவை சிகிச்சை செய்ய வேண்டிய நிலை உண்டாகும்.

பித்தப்பை புற்றுநோயும் சில சந்தர்ப்பங்களில் ஏற்படுகிறது. இதன் அறிகுறிகள் பித்தப்பை கற்கள் போன்று இருந்தாலும், முதுகு மற்றும் அடி வயிற்றில் தாங்க முடியாத வலி உண்டாகும். அறிகுறிகள் தாமதமாக இருந்தால் பிறகு சிகிச்சை செய்வது கடின மாகி விடும்.

இது கணையத்தில் வீக்கத்தை ஏற்படுத்தும் நோயா கும். செரிமான நொதிகள் சிறுகுடலுக்குள் வெளியேறி செயல்படுத்தத் தொடங்குவதற்கு முன்பு கணையத்தை சேதப்படுத்தத் தொடங்குகின்றன. பித்தப்பை கணைய அழற்சி குடல் குழாய்களை அடைக்கிறது. கணை யத்தை இரத்த ஓட்டம் இல்லாமல் உலர்த்தி விடுகிறது. இது கணையத்தின் வீக்கத்தை ஏற்படுத்துகிறது (இது ஒரு தீவிர நிலை).

உங்கள் ஒட்டுமொத்த ஆரோக்கியம் உங்கள் உண வைப் பொறுத்தது. ஆனால் ஒரு சிலர் மட்டுமே உணவை தங்கள் ஆரோக்கியத்திற்காக எடுத்துக் கொள்கிறார்கள். நீங்கள் பித்தப்பை பிரச்சனையால் பாதிக்கப்படுகிறீர்கள் அல்லது பித்தப்பையை ஆரோக் கியமாக வைத்திருக்க விரும்பினால், சில உணவுகளை தவிர்க்க வேண்டியது அவசியமாகிறது.

நீங்கள் பித்தப்பை பிரச்சனைகளை தவிர்க்க விரும் பினால் பேக்கிங் செய்யப்பட்ட உணவுகளை தவிர்ப் பது நல்லது. மஃபின்கள், குக்கீகள், கப் கேக்குகள் மற்றும் பிற வேக வைத்த உணவுகளை உட்கொள்வ தைத் தவிர்க்கவும். அதிகளவு டிரான்ஸ் கொழுப்புகள் பித்தப்பையில் அசௌகரியத்தை ஏற்படுத்தும். எனவே பித்தப்பை பிரச்சினை இருப்பவர்கள் கொழுப்பு குறைந்த உணவை எடுத்துக்கொள்வது நல்லது.

பித்தப்பை சுருங்கிப் போவதற்கு காபி ஒரு முக்கிய காரணமாக அமைகிறது. எனவே பித்தப்பை கற்கள் இருப்பவர்கள் காபியை முற்றிலும் தவிர்ப்பது நல்லது.

அதிக கொழுப்பு நிறைந்த பால் பொருட்களை உண்ணும் போது அஜீரணம் ஏற்படுகிறது. இதனால் வயிற்று வலி அல்லது வாந்தி போன்ற பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

அதிக சர்க்கரை இனிப்புகளை எடுத்துக்கொள்ளும் போது, அது உடலில் படிந்துள்ள கொழுப்புகளை கடினமாக்குகிறது. இதனால் இதய நோய்கள், சிறுநீர்ப்பையில் கற்கள் போன்றவற்றை ஏற்படுத்து கிறது. எனவே இனிப்பு மற்றும் சர்க்கரை பொருட் களை அதிகம் எடுப்பதை தவிருங்கள்.





## சூர்யாவின் பத்துக் கேள்விகள்?

1. முப்பது கோடி மாணவர்களின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் புதிய கல்விக் கொள்கையை நிறைவேற்ற ஏன் இத்தனை அவசரம்?

2. மூன்று வயது குழந்தையால் மூன்று மொழி படிக்க முடியுமா?

3. நாட்டில் 1848 பள்ளிகள் மூடப்படப் போகின்றதே இதற்குப் பதில் என்ன?

4. கல்வியில் சிறந்த நாடுகளில் எட்டாம் வகுப்புவரை எந்தத் தேர்வும் இல்லை என்கிற நிலையில் 3,5,8ஆம் வகுப்புகளுக்கு பொதுத் தேர்வு என்பது எப்படி சிறந்த கல்வியாகும்?

5. நுழைவுத் தேர்வு, பொதுத் தேர்வு, தகுதித் தேர்வு, நீட் தேர்வு என்று மாணவர்கள் தொடர்ந்து தேர்வை எழுதிக் கொண்டிருந்தால் அவர்கள் வாழ்க்கையைப் படிப்பது எப்போது?

6. 1,80,000 அரசு பள்ளி மாணவர்கள் நீட் தேர்வு எழுதியதில் ஒருவர் மட்டுமே பாஸ் என்றால் இதை எப்படிப் பார்ப்பது?

7. 50,000 கல்லூரிகள் 12 ஆயிரமாக குறைக்கப் படுவதும், கோச்சிங் சென்டர்கள் அதிகரிப்பதும்தான் புதிய கல்விக் கொள்கையா?

8. சுமார் 80 இலட்சம் ஆசிரியர்களைக் கொண்ட இந்தியாவில் புதிய கல்விக் கொள்கையை ஒரேயொரு ஆசிரியர் அமைப்பும், ஒரேயொரு மாணவர் அமைப்பும சேர்ந்து தீர்மானிப்பது எந்த விதத்தில் நியாயம்?

9. விதவிதமான கல்வி முறைகளை வைத்துக் கொண்டு தேர்வு மட்டும் பொதுவானது என்துபடிச் சரியாகும்?

10. எதிர்கால தலைமுறையின் தலையெழுத்து எழுதப் படும் நேரத்தில் நாம் இன்னும் விழிப்படையாமல் இருக்கி றோமே ஏன்?

## திருக்குறளும் அரிய தகவல்களும்!



திருக்குறளின் முதல் பெயர் – முப்பால்

திருக்குறளில் உள்ள அதிகாரங்கள் – 133

திருக்குறள் அறத்துப்பாலில் உள்ள குறட்பாக்கள் – 380

திருக்குறள் பொருட்பாலில் உள்ள குறட்பாக்கள் – 700

திருக்குறள் காமத்துப்பாலில் உள்ள குறட்பாக்கள் – 250

திருக்குறளில் உள்ள சொற்கள் – 14,000

திருக்குறளில் உள்ள மொத்த எழுத்துக்கள் – 42,194

திருக்குறளில் தமிழ் எழுத்துக்கள் 247-இல், 37 எழுத்துகள் மட்டும் இடம்பெறவில்லை.

திருக்குறளில் இடம்பெறும் இரு மலர்கள் – அனிச்சம், குவளை.

திருக்குறளில் இடம்பெறும் ஒரே பழம் – நெருஞ்சிப்பழம்

திருக்குறளில் இடம்பெறும் ஒரே விதை – குன்றிமணி

திருக்குறளில் பயன்படுத்தப்படாத ஒரே உயிரெழுத்து – ஔ

திருக்குறளில் இருமுறை வரும் ஒரே அதிகாரம் – குறிப்பறிதல்

திருக்குறளில் இடம்பெற்ற இரண்டு மரங்கள் – பனை, மூங்கில்.


திருக்குறளில் அதிகம் பயன்படுத்தப்பட்ட (1705) ஒரே எழுத்து – னி

திருக்குறளில் ஒருமுறை மட்டும் பயன்படுத்தப்பட்ட இரு எழுத்துக்கள் – ளீ, ஙு

திருக்குறளில் இடம்பெறாத இரு சொற்கள் – தமிழ், கடவுள்.

திருக்குறள் மூலத்தை முதன் முதலில் அச்சிட்டவர் – தஞ்சை ஞானப்பிரகாசர்.

திருக்குறளுக்கு முதன் முதலில் உரை எழுதியவர் – மணக்குடவர்.



ஆனால் முதலை, "நான் உன்னை சத்திய மாகச் சாப்பிட மாட் டேன். என்னைக் காப் பாற்று" என்று கண்ணீர் விடுகிறது.

ஒரு கிராமத்தில் சிறுவன் ஒருவன் ஏரிக்கரையில் விளையாடிக் கொண்டு இருக்கிறான்.

அப்போது, "என்னை காப்பாற்று, காப்பாற்று" என்று ஓர் அலறல், ஆற்றோரத் தண்ணீரில், வலைக் குள் சிக்கி இருக்கும் முதலை ஒன்று சிறுவனைப் பார்த்துப் பரிதாபமாக கதறுகிறது.

"மாட்டேன், உன்னை விடுவித்தால் என்னை விழுங்கி விடுவாய். காப்பாற்ற மாட்டேன் என மறுக் கிறான் சிறுவன்.

முதலையின் பேச்சை நம்பி, சிறுவனும் வலையை அறுக்க ஆரம்பிக்கிறான். அறுத்து முடிப்பதற்குள், சிறுவனின் காலைப் பிடித்துக் கொண் டது.

பாவி முதலையே இது நியாயமா? என்று சிறுவன் கண்ணீருடன் கேட்க,

"அதற்கென்ன செய்வது, பசி வந்தால் பத்தும் பறந்துவிடும். இதுதான் உலகம். இதுதான் வாழ்க்கை என்று சொர்லலிவிட்டு விழுங்க ஆரம்பித்தது முதலை.

# வாழ்க்கையின் தத்துவம்

சிறுவனுக்கு சாவது பற்றிக்கூட கவலை இல்லை. முதலை ஏமாற்றி விட்டதோடு மட்டும் அல்லாமல், நன்றிகெட்டதனத்தை, இதுதான் உலகம் என்று சொல்வதை அவனால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

மரத்திலிருந்த பறவைகளைப் பார்த்துக்கேட்டான். இதுதான் உலகமா? அதற்கு பறவைகள், "எத்தனையோ பாதுகாப்பாக மரத்தின் உச்சியில் நாங்கள் முட்டையிடு கிறோம். ஆனாலும், பாம்புகள் முட்டை களை குடித்து விடுகின்றன. அதனால், இதுதான் உலகம் என்று சொல்லின.

அங்கு மேய்ந்து கொண்டு இருக்கும் கழுதைகளைப் பார்த்து கேட்கின்றான். நாங்கள் இளமையாக இருந்த காலத்தில் அதிகப்படியான சுமைகளை சுமக்கச் செய்து, அடித்து, சக்கையாக வேலை வாங்குகிறார்கள். எங்களுக்கு வயதாகி, நடை தளர்ந்தவுடன் தீனி போட முடியாது என்று விரட்டிவிடுவதால், முதலை சொல்வது சரிதான் என்கின்றன.

ஆடுகளை கேட்கிறான். எங்களுக்கு இரை போட்டு வளர்ப்பவர்களே, எங்களை இரையாக்கி கொள்வதால், முதலை சொல்வது சரிதான் என ஆமோதிக்கின்றன.

கடைசியாக ஒரு முயலைப் பார்த்துக் கேட்கின் றான். இதுவல்ல உலகம். முதலை பிதற்றுகிறது என முயல் சொல்ல, முதலைக்கு கோபம் வந்துவிடுகிறது.

சிறு முயல் உனக்கு என்ன தெரியும்? என்று முதலை சொல்லவும்,

நீ பேசுவது சரியாக புரியவில்லை, தெளிவாக பேசு என்கிறது முயல்.

காலை விட்டால் சிறுவன் ஓடிவிடுவான் என்ற முதலையைப் பார்த்து, முயல் பெரிதாகச் சிரித்தது.

உன் வாலை வைத்து அவனை அடித்து விட முடியாதா? ஒரே அடியில் அவனை வீழ்த்திவிடமுடியும் உன்னால், என்றவுடன், கர்வத்துடன் காலை விட்டு விட்டு, இதுதான் உலகம் என பேச துவங்கியது முதலை.

முயல் சிறுவனைப் பார்த்து நிற்காதே! ஓடிவிடு என்கிறது.

சிறுவன் ஓடிவிடுகிறான். வாலால் அடித்து விடலாம் என நினைத்த முதலைக்கு ஏமாற்றமாகப் போய்விடுகிறது, வலையில் சிக்கியிருக்கும் வால் பகுதியை விடுவிப்பதற்குள் சிறுவனை பிடித்தது நினைவுக்கு வருகிறது.

கோபத்துடன் முயலைப் பார்க்க, "புரிந்ததா? இதுதான் உலகம். இதுதான் வாழ்க்கை என்கிறது முயல்.

தப்பி ஓடிய சிறுவன் கிராமத்தினரை அழைத்துவர, அவர்கள் முதலையை கொன்றுவிடுகின்றனர்.

சிறுவனோடு வந்த வளர்ப்பு நாய், புத்திசாலி முயலை பார்த்துப் பிடித்துக் கொள்கிறது. முயலை, சிறுவன் காப்பாற்றுவதற்குள் நாய் கொன்றுவிடுகிறது.

உயிராக வளர்த்த நாய்தான் என்றாலும், உயிரைக் காப்பாற்றிய முயலை கொன்றுவிட்டதை: அவனால் சகித்துக் கொள்ளமுடியவில்லை.

கல்லெடுத்து எறிந்து நாயை விரட்டிவிடுகிறான்.

உதவி செய்வதர்களுக்கு உபத்திரவம் ஏற்படுவதும், நேசித்தவர்களையே வெறுக்க நேரிடுவதும் அவனை குழப்பிவிடுகிறது.

இதுதான் உலகமா?

இதுதான் வாழ்க்கையா? என்ற கேள்விக்கு பதில் சொல்வார் யாருமில்லை!

முன்னுக்குப்பின் முரணானதாகவும், எதிரும் புதிருமான நிகழ்வுகள்தான் வாழ்க்கை!

அடுத்த நொடிகளில் நடக்க இருப்பது, அதிர்ச்சிகளா? வியப்புகளா? என அறியமுடியாமல் இருப்பதுதான் வாழ்க்கையின் எதிர்பாரா நிகழ்வுகள்.

"வாழ்க்கையை புரிந்துகொள்ளமுடியாது. புரிய வைக்கவும் முடியாது. (எதிர் வருவதை) எது நடந்தாலும் ஏற்றுக்கொண்டு, முன்னேறுவதுதான் வாழ்க்கை".

●



## "ஒரேகாரணம்"

சாதி பேதம் கூடாது என்பதற்கு ஆயிரத்தெட்டுக் காரணங்கள் வேண்டாம்.தமிழ் மொழியில் 'சாதி' என்ற சொல்லே இல்லை ! அந்த ஒரு காரணமே போதும்.

சாதி வேண்டாம் என்றவன் தமிழன்.

வள்ளுவப் பெருந்தகை ஈராயிரம் ஆண்டுக்கு முன்பே, 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்றார். வள்ளுவர் வழி நடக்காமல் தமிழ் படித்து என்ன பயன் ? ...அறிஞர் அண்ணா

# பார்ப்பன பாசிச எதிர்ப்பின் அரணாக தமிழகம்

நியூஸ் 18 குணா, செந்தில், ஆசிஃப் ஆகியோரை வெளியேற்றுமாறு பார்ப்பனக் கும்பினியார் இட்ட உத்தரவை பனியா கம்பெனி நிறைவேற்றவிருக்கிறது என்ற செய்தி சமூக ஊடகங்களில் வலம் வருகிறது.

இவர்களைக் குறி வைத்து கொஞ்ச நாட்களாக பங்களா நாய்கள் குரைத்தன. ஒதுக்குவதற்கோ, நீக்குவதற்கோ வெளிப்படையாக சொல்லத்தக்க காரணம் எதுவும் அவர்களிடம் இல்லை என்பது எதிரிகளின் பலவீனம். அதுதான் நமது பலம். எதிரிகளை வெளிப்படையாக விமர்சிக்கும் தைரியம் ஊடகத்துறையினரிடம் இல்லை என்பது நமது பலவீனம். இதுதான் எதிரிகளின் பலம்.

நியூஸ் 18 குறி வைக்கப்படுவது இது முதல் முறையல்ல. எஸ்.வி.சேகர் இரண்டு ஆண்டுகளுக்கு முன் பார்ப்பனத்திமிருடன் பெண் பத்திரிகையாளர்களை இழிவாகப் பேசியதை பத்திரிகையாளர்கள் எதிர்த்தார்கள். சிலர் சேகர் வீட்டின் மீது செருப்பை வீசினார்கள், கல்லெறிந்தார்கள் என்ற குற்றச்சாட்டு வந்தது. இது வரம்பு மீறிய நடவடிக்கை என்று சில பத்திரிகையாளர்கள் கண்டித்தார்கள். சிலர் வருத்தமும் தெரிவித்தார்கள்.

“பிழைப்பதற்கான வழிகள் எனப்படுபவை மேன்மேலும் மானங்கெட்டவையாக மாறிக் கொண்டிருக்கும் இன்றைய சூழலில், மானமுள்ளவர்கள் இன்னமும் நாட்டில் எஞ்சியிருக்கிறார்கள் என்று நெஞ்சை நிமிர்த்திக் கொள்கிறோம். கல்லெறிந்த பத்திரிகையாளர்களே, தமிழ்ச் சமூகத்தின் மானத்தைக் காப்பாற்றியமைக்கு எங்கள் கோடானகோடி நன்றிகள்“ என்று ம.க.இ.க.வின் சார்பில் அப்போது வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டிருந்தேன். இன்றும் அதையே வலியுறுத்துகிறேன்.

யாராவது ஒருவரேனும், அநீதி இழைக்கும் நிர்வாகத்தின் மீது ‘கல்’ எறியுங்கள். தொலைக்காட்சியன் ‘நடுநிலை நேர்மை’ என்ற டிப்புக்குப் பின்னால் இருக்கும் வண்டவாளங்களை சந்திக்குக் கொண்டு வாருங்கள்.

ஆங்கில இந்து நாளேட்டின் ஆசிரியர் பொறுப்பிலிருந்த சித்தார்த் வரதராஜனை தகுதியிறக்கம் செய்தார்கள். அதனை எதிர்த்து அவர் பதவி விலகினார். தனது விலகலுக்குக் காரணமாக அமைந்த சம்பவங்களை பொதுவெளியில் உடைத்தார். ‘மோடிக்கு முதல் பக்க கவரேஜ் கொடுக்கவில்லை, சு.சாமியின் அறிக்கைகளை வெளியிடவில்லை’ என்ற வெட்கக்கேடான விசயங்களெல்லாம் அவருடைய தகுதியிறக்கத்துக்குக் காரணமாக இருந்தன என்ற உண்மை அம்பலமானது. மோடி அரசு ஏபிபி சானலை எப்படி வழிக்குக் கொண்டு வந்தது என்பதை பிரசூன் பாஜ்பாய், எழுதினார்.

மோடிக்கு ‘தண்ணி’ காட்டிய கரண் தபாரை, எல்லாத் தொலைக்காட்சிகளும் ஓரங்கட்டின. இன்று வயர் இணையதளத்தில் எல்லைப் பிரச்சனை தொடர்பாக அவர் எடுக்கும் பேட்டிகள், மோடியைத் துன்புறுத்துகின்றன. கரண் தபார் படத்தைப் போட்டு ‘சீனக் கைக்கூலி’ என்று வசை பாடுகிறது ஆர்கனைசர். தனக்கு கொலை மிரட்டல் வந்தவண்ணமிருப்பதாக என்.டி.டி.வி ராவிஷ் குமார் சொல்கிறார்.

என்.டி.டி.வியின் நிதி ராஸ்தான், ஹார்வர்டில் ஆசிரியப்பணிக்குச் செல்கிறார். ஊடகப்பணியிலிருந்து வெளியேறுகிறார். இருப்பினும், பாஜகவின் சம்பித் பாத்ராவை “விவாத அரங்கிலிருந்து வெளியேறு“ என்று அவர் கம்பீரமாக உத்தரவிட்ட காட்சி இன்னும் நம் கண்ணில் நிற்கிறது.

வட இந்தியாவில் பாஜகவை எதிர்த்து நிற்பவர்கள் தம் உயிரையே பணயம் வைத்து வேலை செய்கிறார்கள். ‘புலம்பெயர் தொழிலாளிகளுக்கு ரேசன் விநியோகிக்கப்படவில்லை’ என்று அம்பலப்படுத்தியதற்காக இமாச்சல் பிரதேச தைனிக் ஜாக்ரன் பத்திரிகை நிருபர் மீது ‘பாண்டமிக் ஆக்ட்’ இல் வழக்கு. இது பற்றி அவர் மோடிக்கு புகார் செய்தார். விளைவு இன்னொரு வழக்கு. ஐம்பத்தைந்து செய்தியாளர்கள் கொரோனா செய்திகளுக்காக மட்டுமே வழக்கைச் சந்தித்திருக்கிறார்கள்.

வட இந்தியாவை ஒப்பிடும்போது தமிழகம் சொர்க்கம். உங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராக யாரேனும் ஒருவராவது உடைத்துப் பேசுங்கள். அந்த நடவடிக்கைதான் எதிரிகளை அச்சுறுத்தும்.

ஊடகங்களில் முதலாளிகள் போடுவது பணம் மட்டும்தான். செய்திகள், நிகழ்ச்சிகள் மூலம் நிறுவனத்தை வளர்த்து, மக்கள் மத்தியில் அந்த ஊடகத்துக்கு ஒரு அங்கீகாரத்தையும் நம்பகத்தன்மையையும் ஏற்படுத்தியவர்கள் நீங்கள். அந்த மதிப்பை அவர்கள் தக்கவைத்துக் கொள்கிறார்கள்.

சில கைத்தடிகள் மூலம் உங்கள் மதிப்பைக் குலைக்கிறார்கள். பின்னர் அதிகாரபூர்வமற்ற முறையில் வெளியேற்றுகிறார்கள். உண்மையை அம்பலப்படுத்திவிட்டு வெளியேறுங்கள். அதுதான் சுயமரியாதையுள்ள நடவடிக்கை. நடந்து கொண்டிருப்பது 'உங்கள் தனிப்பட்ட விவகாரம்' என்று நீங்கள் கருதினால் அது பெரும் தவறு. தமிழ் மக்களுக்கு எதிராக நடத்தப்படும் சதியையும் சதிகாரர்களையும் பற்றிய உண்மைகளை வெளியிடாமல் இருப்பது, நிச்சயமாக உங்கள் தனிப்பட்ட விவகாரம் அல்ல.

பேசுங்கள், நீங்கள் இன்று வெளியேற்றப்படுவதைப் பற்றி மட்டுமல்ல, நீங்கள் பணியாற்றிய காலத்தில் திரைமறைவில் நடந்த எல்லா உண்மைகளையும் பேசுங்கள்.

தமிழகத்தில் அடித்தளமே இல்லாத பாசக வையும், பல அனாமதேயங்களையும் தமிழக தொலைக்காட்சிகள்தான் அளாக்கி நிறுத்தின. 'ஊடக முதலாளிகளின் ஆதாயம்' என்ற ஒரு காரணத்தைத் தவிர இந்தப் பார்ப்பனக் கைக்கூலித்தனத்துக்கு வேறு எந்த நியாயமும் இல்லை. 'இது ஊடகநெறிக்கு எதிரானது' என்று பேசுபவர்கள் 'காலச்சூழ்நிலை புரியாத முட்டாள்கள்' என்று சொல்லத்தக்க அளவுக்கு இதுவே 'புதிய ஊடக நெறியாக' மாறிவிட்டது.

தூத்துக்குடி துப்பாக்கிச்சூடு நடக்கும்போது எல்லாத் தொலைக்காட்சி காமெராக்களும் களத்தில்தான் இருந்தன. போலீசு உத்தரவிட்டவுடனே எல்லோரும் முகம் திருப்பிக் கொண்டனர். எடுக்கப்பட்ட படுகொலைக் காட்சிகளும் ஒளிபரப்பப் படவில்லை. வேன் மீது ஏறிநின்று சுடுவதை யாரோ ஒருவர் முகநூலில் வெளியிட்டார். அது ஒன்றுதான் அந்த கோரமான படுகொலைக்கு ஆதாரம். எல்லாத் தொலைக்காட்சி காமெராக்களும் போலீசு அராசகத்தை மறைப்பதற்குத்தான் பயன்பட்டன. கூடங்குளம், இடிந்தகரை துப்பாக்கிச் சூட்டின்போதும் இதுதான் நடந்தது.

இதுபோன்ற இருட்டடிப்புகள் இன்னும் எத்தனை, அரசியல் விவாதங்களின் நிகழ்ச்சி நிரல்கள் எப்படியெல்லாம் செட் அப் செய்யப்பட்டன என்பது உங்களுக்கு மட்டும்தான் தெரியும். உங்கள் பேச்சுதான் அந்த ஊடகத்தின் நம்பகத்தன்மையை பொதுவெளியில் கேள்விக்குள்ளாக்கும்.

ஊடகத்துறையில் கொரோனாவைச் சொல்லி ஆட்குறைப்புச் செய்து நூற்றக்கணக்கானோரை வெளியேற்றுகிறார்கள். அப்போதும் ஊடகத் துறையினர் சங்கமாகத் திரளவில்லை. எதிர்ப்புக் குரல் எழுப்பவு மில்லை. இதற்கு என்னதான் முடிவு?

"வெளியில் இருப்பவர்கள் பேசலாம். உள்ளே இருப்பவர்கள் பேசினால் இன்னொரு ஊடகத்தில் எப்படி வேலை கிடைக்கும்?" என்று மிகவும் இயல்பாக பலர் கேள்வி எழுப்புகிறார்கள். இது ஊடகத்துறையில் தொழிற்சங்க இயக்கமே இல்லாமல் போனபின், கடந்த சில பத்தாண்டுகளில் வந்திருக்கும் 'புதிய இயல்புநிலை'.

ஊடகத்துறையில் ஜனநாயகமே இல்லாத இந்த இயல்புநிலையை அப்படியே பராமரித்துக் கொண்டு, பாசக வுக்கு எதிராக மட்டும் சனநாயகத்தை நிலைநாட்டுவது எப்படி சாத்தியம்?

நான் கூறுவது குற்றச்சாட்டும் அல்ல, அறிவுரையும் அல்ல. இன்று குணசேகரன், செந்தில், ஆசிஃப் ஆகியோருக்காக தமிழ்ச் சமூகத்திலிருந்து இத்தனை குரல்கள் எழுவதற்குக் காரணம் உங்கள் பங்களிப்பு. இந்த எதிர்வினை அதற்கான அங்கீகாரம். நீங்கள் பேசாவிட்டாலும் நாங்கள் பேசுவோம். ஏனெனில் இது மக்கள் பிரச்சனை.

"இந்த சானல்களை மக்களும் கட்சிகளும் புறக்கணிக்க வேண்டும்" என்று முகநூல்களில் எழுதுகிறார்கள். இவ்வாறெல்லாம் நடக்கத்தான் செய்யும் என்று எதிரிகளுக்கும் தெரியும். அதற்கான மாற்று மருந்துகளுடன்தான் பாசிஸ்டுகள் இந்த ஆட்டத்தையே தொடங்கியிருப்பார்கள்.

பார்ப்பனர்களை மட்டும் வைத்து சானல் நடத்தினால் அது தியாகய்யர் உற்சவம் போலவும், மியூசிக் அகாதமி கச்சேரி போலவும் அக்ரகாரத்தில் முடங்கிவிடும் என்பது அவாளுக்கும் தெரியாதா?

வீடணர்கள் இல்லாமல் ராமனுக்கு வெற்றி கிடையாது. தமிழகத்தில் வீடணர்களுக்கா பஞ்சம்? இந்த அநீதியை எதிர்த்து நியூஸ்18 லிருந்து எத்தனை பேர் வெளியே வரப்போகிறார்கள், எத்தனை பேர் தங்கள் தோலைக் காப்பாற்றிக் கொள்வதற்காக உங்களைக் கைகழுவப் போகிறார்கள் பார்ப்போம்.

கைகழுவுகிறவர்கள் குற்றவுணர்ச்சிக்கு ஆளானது போல சில நாட்கள் நடிப்பார்கள். பிறகு, தங்களை நியாயப்படுத்திக் கொள்வதற்காக முதலாளியை நியாயப்படுத்தி பேசத் தொடங்குவார்கள். அந்த சத்சூத்திரர்கள் பேசத் தொடங்குவதற்கு முன்னால் நீங்கள் பேசவேண்டும். 'பார்ப்பன பாசிச எதிர்ப்பின் அரணாக தமிழகம் இருக்கிறது. அந்த நம்பிக்கை பொய்த்துவிடக் கூடாது. அதற்காகவாவது நீங்கள் பேச வேண்டும்.

**- மருதையன்**

# வியட்நாம் மண்ணில் இராஜ ராஜ சோழர்கள்

20 வருட கடும் போராட்டத்துக்கு பின் வியட்நாம் அமெரிக்காவை வென்றது (19551975)

போர் முடிந்ததும் ஒரு செய்தியாளர் வியட்நாம் அதிபரை பார்த்து கேட்டார், இது எப்படி சாத்தியம்?

ஒரு சிறிய தெற்காசிய நாடு, வல்லரசு அமெரிக்காவை தோற்கடித்தது எப்படி? அதற்கு அந்த அதிபர் அமெரிக்க போன்ற வல்லரசை தோற்கடிப்பது மிகவும் கடினம். ஆனால், ஒரு சரித்திர புகழ்பெற்ற மாவீரனின் வீரமும் தீரமும் செறிந்த கதையை படித்தேன். அது எனக்குள் எழுப்பிய கனலால்தான் இந்த வெற்றி சாத்தியமாகியது. அவரின் போர்த் தந்திரங்கள், யுக்திகளை எங்கள் போரில் கடைபிடித்தோம். வெற்றி கிடைத்தது என்றார்.

யார் அந்த மாவீரன், பேரரசன் என பத்திரிகையாளர் வினவ?

வேறு யாருமில்லை. கிழக்காசியாவை வென்ற இராஜராஜ சோழன் தான். வியட்நாமில் மட்டும் இப்படி ஒரு மாவீரன் அவதரித்திருந்தால் இந்நேரம் உலகம் எங்கள் கைகளில் இருந்திருக்கும். என்றார்.

சில ஆண்டுகள் கழித்து அந்த அதிபர் இறந்து போனார். அவரது கல்லறையில் அவரது விருப்பப்படி பொறிக்கப்பட்ட வாசகம்,

“இராஜராஜனின் பணிவான பணியாள் இங்கே ஓய்வெடுத்து கொண்டிருக்கிறார்.”

இப்பொழுதும் அங்கே சென்றால் அதை நாம் காணலாம்.

சில ஆண்டுகள் கழித்து வியட்நாம் வெளியுறவுத் துறை அமைச்சர் இந்தியா வர நேரிட்டது.

நம்மாட்களும் வழக்கம்போல காந்தி சமாதி, சக்தி ஸ்தல், செங்கோட்டை, அது இதுனு சுத்தி காட்ட,

அலுத்து போன அமைச்சர், இராஜ ராஜன் பிறந்த ஊர், அரண்மனை சிலை எங்கே உள்ளது என அதிகாரிகளை கேட்க, அவர்கள் வியப்புடன், அது தமிழ்நாடு தஞ்சாவூர்ல இருக்கு என்றனர். உடனே தஞ்சாவூர் போக வேண்டும் என வியட்நாம் அமைச்சர் கூற படை தஞ்சாவூருக்கு பறந்தது.

இங்கு வந்து, தஞ்சை பெரிய கோவிலில் அவர்கள் இராஜராஜன் சிலைக்கு அஞ்சலி செலுத்திய பிறகு, கையளவு மண்ணை அள்ளி, மரியாதையுடனும் வாஞ்சையுடனும் தன் பையில் சேமித்து கொண்டார்.

இதைக்கண்ட பத்திரிகையாளர்கள் வழக்கம் போல வினா எழுப்பினர்.

இந்த மண் வீரமும் வெற்றியும் நிறைந்த இராஜ ராஜன் பிறந்து வளர்ந்த மண். வியட்நாம் சென்றடைந்ததும் என் தேச மண்ணில் இந்த மண்ணை கலந்து விடுவேன்.

இனி வியட்நாம் மண்ணில் பல்லாயிரம் இராஜ ராஜ சோழர்கள் பிறக்கட்டும் என்றார் உணர்ச்சி வசப்பட்டவராக.

தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா.



# வறண்ட தொண்டைக்கு மருத்துவம்!

குளிர்காலம் அல்லது இளவேனிற் காலத்தில் ஏற்படக் கூடிய பொதுவான ஒரு பிரச்சனைதான் வறண்ட தொண்டை. எரிச்சல், வறட்சி, அரிப்பு போன்றவற்றை தொண்டையின் பின் பக்கம் உணர்வதே வறண்ட தொண்டைக்கான அறிகுறி. இந்த நிலை சில நேரங்களில் சுவையில் மாற்றத்தை ஏற்படுத்தும். அல்லது விழுங்குவதில் சிரமத்தை உண்டாக்கும். வறண்ட தொண்டை ஏற்படுவதற்கு பல நேரங்களில் காரணமாக இருப்பது வைரல் தொற்று அல்லது வறண்ட காற்றாகும். மேலும், தூங்கும் போத வாயால் சுவாசிப்பதாலும், புகைப்பிடிப்பதாலும் கூட இது ஏற்படும். ஆனால், வறண்ட தொண்டை என்பது மோசமான நிலை அல்ல. சில சிறந்த, வீட்டு சிகிச்சைகளைப் பின்பற்றினால் யாருக்கு வேண்டுமானாலும் இது எளிதில் குணமாகிவிடும்.

**1. தேன் :**

வறண்ட தொண்டைக்கு சிகிச்சை அளித்திட இது ஒரு சிறந்த சிகிச்சையாக விளங்கும். தேன் என்பது இயற்கையான முறையில் குணப்படுத்தும் என்சைம்களால் நிறைந்ததாகும். மேலும் இதில் பாக்டீரியா எதிர்ப்பு மற்றும் தொண்டைக்கு இதமளிக்கும் குணங்கள் அடங்கியுள்ளது. இது தொண்டைக்கு இதமளிப்பதோடு, இருமலைத் தூண்டும் காரணிகளையும் போக்கும். சிறந்த பலனைப் பெற அதனை அப்படியே சாப்பிடுவது நல்லது. அப்படி இல்லையென்றால் அதில் எலுமிச்சை ஜூஸைப் பிழிந்து, தேவைப்படும் போது அதிலிருந்து ஒரு தேக்கரண்டி குடியுங்கள்.

**2. மூலிகை தேநீர் :**

வறண்ட தொண்டைக்கான பழமையான சிகிச்சைகளில் ஒன்று தான் மூலிகை தேநீர் பருகுவது. இதில் இயற்கையான முறையில் குணப்படுத்தும் என்ஸைம்கள் நிறைந்திருக்கிறது. இது தொண்டை வறட்சியைப் போக்கும்.

சூடான தேநீரைப் பருகும்போது அதிலுள்ள வெப்பம், என்ஸைம்களை காற்று பாதைக்குள் நுழையச் செய்யும். அதற்கு இந்த தேநீரைத் தயாரிக்க, சூட்டைத் தாங்கும் கப்பை எடுத்துக் கொள்ளுங்கள். அதில் சூடான தண்ணீரைச் சேர்த்துக் கொள்ளுங்கள். இந்தக் கலவையை அறுபது நொடிகளுக்கு அப்படியே விட்டு விடுங்கள்.

இப்போது இதில் கொஞ்சம் தேனையும் சற்று எலுமிச்சையையும் பிழிந்து கொள்ளுங்கள். தேனில் கிருமிநாசினி குணங்கள் நிறைந்துள்ளது. அதனால் தொண்டையைச் சுற்றியுள்ள எரிச்சல் குறையும். இந்த தேநீரை நீங்கள் மெதுவாகப் பருகலாம்.

**3. ஆரஞ்சு ஜூஸ் :**

இந்த பானம் எலக்ட்ரோலைட்ஸ்களை திருப்பிக் கொடுக்கும். இது போக வறண்ட வாய்க்கு ஈரப்பதத்தையும் அளிக்கும். ஒரு தேக்கரண்டி உப்பு, ஒரு தேக்கரண்டி சர்க்கரை, அரை தேக்கரண்டி பேக்கிங் சோடா, கொஞ்சம் எலுமிச்சை அல்லது ஆரஞ்சு ஜூஸை ஒரு டம்ளர் தண்ணீருடன் சேர்த்துக் கொள்ளவும். உங்கள் தொண்டைக்கு ஈரப்பதத்தை அளிக்க கடைகளில் விற்கும் விலை உயர்ந்த பானங்களை வாங்குவதற்குப் பதில் இந்தப் பானத்தைப் பருக வல்லுனர்கள் பரிந்துரைக்கிறார்கள்.



# ஆர்.கே.சண்முகம் செட்டியார்

## இந்திய ஒன்றியத்தின் முதல் நிதி அமைச்சர்

இந்தியா சுதந்திரம் பெற்றபோது அமைக்கப் பட்ட இடைக்கால அரசு காங்கிரசுக் கட்சியின் சார்பாக ஏற்படுத்தப்பட்டாலும், அதன் நிர்வாக அமைப்பில் அனைத்துக் கட்சிகளையும் சார்ந்த பலருக்கும் வாய்ப்பு அளிக்கப்பட்டது. துறை சார்ந்த அறிவுடைய பல்வேறு கட்சியினரும், அந்தந்தத் துறையில் நிர்வகிக்கும் பொறுப்பினைப் பெற்றார்கள். அப்படித்தான் தமிழகத்திலிருந்தும் பல்வேறு கட்சியினர் சுதந்திர இந்தியாவின் முதல் பாராளுமன்ற அவையில் இடம் பெற்றனர். அவர்களுள் குறிப்பிடத் தக்க தலைவர்களில் ஒருவர்தான், நம் எல்லோராலும் ஆர்.கே.எஸ். என்று அறியப்பட்ட சர். ஆர். கே. சண்முகம் செட்டியார்.

**பழ.கருப்பையா - முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்**



'யாருடைய அறிவைப் பயன்படுத்தி இந்திய நாட்டை மேல்நிலைக்கு கொண்டு வரலாம். வெள்ளைக்காரன் சுரண்டிவிட்டு, ஒரு எலும்புக்கூடாக விட்டுப் போயிருந்த இந்தியாவை சதைப்பிடிப்பு நாடாக ஆக்குவதற்கு யாருடைய அறிவையெல்லாம் பயன் படுத்திக் கொள்ள முடியும் என்கின்ற நிலை இருந்தது. எனக்குத் தெரிந்த இந்திய அரசியலில், அறிவுக்கும், நேர்மைக்கும் முழு மரியாதை இருந்த காலகட்டம் என்பது 1947க்கும் 1970க்கும் இடையே உள்ள காலம்தான். அப்பொழுது நேரு அவர்கள் எங்கிருந்தாலும் அழைக்கப்பட் டார்கள். அத்தகைய நிலை சண்முகம் செட்டி யார் போன்றவர்களுக்கு இருந்தது. ஆகவே, அது பொற்காலம் என்றுதான் சொல் லுவேன். ஏனென் றால் அந்த கட்டு மானம், இந்தியாவினு டைய கட்டுமானம் அப்பொழுது நிகழ்ந்தது.




நேரு அவர்கள் பதினேழு ஆண்டுகள் இந்த நாட்டை ஆளுகின்றபோது, சொந்தக் கட்சி, எதிர்க் கட்சி, நம்மை விமர்சித்தவன், கேவலப் படுத்தியவன், நமக்கு மாறாக நடந்தவன் என்ற உணர்வினை எல்லாம் தள்ளிவிட்டு, நேரியவர்களையும், அறிவாளர் களையும் அழைத்து மந்திரி சபையில் வைத்து இந்த நாட்டைக் கட்ட வேண்டும் என்ற உணர்வு அவருக்கு இருந்தது. அந்த உணர்வால் தான் சண்முகம் செட்டி யார் அவர்கள் நிதி அமைச்சரானார். இந்தியா விலேயே மிகச்சிறந்த நிதி அமைச்சர் என்று சொல்வார்கள் அவரை.

அதற்குக் காரணம் பொக்கையாக இருந்த ஒரு நாட்டுக்கு நிதி அமைச்சராக வருவது, அதை சுதந்திர இந்தியாவின் போக்கிற்கு ஏற்ப உருவாக்குவது என்பது எளிதானதல்ல.

**கிருஷ்ணமூர்த்தி - நிறுவனர், ஞானாலயா ஆய்வு நூலகம்**

இந்திய விடுதலை பெற்றபோது நேருவின் தலைமையில் முதல் அமைச்சரவை ஏற்படுத்தப் பட்டது. அதில் யாரை நிதி அமைச்சராக நியமிக்கலாம் என்ற கேள்வி எழுந்தபோது காந்தியார்தான், "ஆர்.கே.சண் முகம் செட்டியாரை நிதி அமைச்சராகப் போடு, சட்ட அமைச்சராக அம்பேத்காரைப் போடு" என்று சிபாரிசு செய் தார். இது பல பேருக்குத் தெரி யாத உண்மை. அம்பேத்கார் அவர்களை, நேரு அவர்களே தன்னுடைய விருப்பத்திற்கு இணங்குமாறுசெய்து, அவரை சட்ட அமைச்சராக்கி விடுகி றார். ஆனால் தென்னாட்டில் இருந்த ஆர்.கே.எஸ், அவர்களை நிதி அமைச்சராக்க, பொறுப்பேற்கச் செய்யும் பொறுப்பை நேரு அவர்கள் இராசாசியிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, 'நீங்கள் எப்படியாவது ஆர்.கே. எஸ் ஐ இதற்குச் சம்மதிக்க வைக்க வேண்டும் என்று சொல்லி, அவரை நிதி அமைச்சராக தன்னுடைய அமைச்சரவையில் சேர்த்துக் கொண்டார்.



**பசுபதி தன்ராஜ் - முன்னாள் இளைஞர் காங்கிரஸ் தலைவர்**

சண்முகம் செட்டியாருக்கு இருக்கின்ற இன்னொரு சிறப்பு என்னவென்றால் வெள்ளைக்காரர்கள் போகும்போது, அந்த கடைசி நிர்வாகத்திலே இருந்த நிதியமைச்சரும் அவரே, இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு இருந்த முதல் நிதியமைச்சரும் அவரே. வெள்ளை நிர்வாகத்தை கடைசியாகப் பார்த்தவரும் அவரே, சுதந்திர இந்தியா ஜனித்தபோது சண்முகம் செட்டி யாரின் ஒரு பங்கு இருக்கிறது என்பது ஒரு சிறப்பு. அதே போல் நிதியமைச்சராக இருந்த அந்த குறுகிய காலகட்டத்தில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி களை திறம்படக் கையாண்டார்.

இரண்டாம் உலக யுத்தத்தில் இங்கிலாந்து சார்பாக இந்தியா சந்தித்த பொருளாதார சீரழிவுகளை, பிரிட்டீஷ் அரசிடம் சுட்டிக்காட்டி அதற்கு இணையான இழப்பீடுகளை பிரிட்டீஷ் அரசிடம் இருந்து பெற்றுத் தந்தவர் ஆர்.கே.சண்முகம் செட்டியார்.

**கிருஷ்ணமூர்த்தி**

இரண்டாவது உலக யுத்தத்தில் ஈடுபட்டதின் காரணமாக ஏற்பட்ட ஒரு பொருளாதார நெருக்கடி யில், சுதந்திரம் பெற்ற பிறகு அந்தத் தொகையை இங்கிலாந்து தர மறுக்கிறது. அப்பொழுது ஆர்.கே.எஸ் அவர்கள், சுதந்திர இந்தியாவின் பிரதமராக இருந்த சர்ச்சில் இடத்திலே வாதாடி, "எமக்குச் சேர வேண்டிய அந்தப் பணம் எங்களுக்குதான் முறையாகச் சேர வேண்டும். அதற்குக் காரணம் நீங்கள்தான். ஏனென் றால் யுத்தம் உங்களுக்கும், ஜெர்மனிக்கும் இடையே தவிர, அடிமைப்பட்டிருந்த நாங்கள் உங்களுக்கு உதவலாமா? வேண்டாமா என்ற கருத்தில்தான் இருந்தோம். முடிவெடுக்கவில்லை. எங்கள் நாட்டி னுடைய பொருளினைப் பயன்படுத்திய காரணத்தி னால் எங்களுக்கு ஏற்பட்ட இழப்பு இது. ஆகவே, அந்த இழப்பை ஈடுகட்ட வேண்டியது உங்களுடைய பொறுப்புதான். ஆகவே அந்தப் பணத்தை தாருங்கள்" என்று சொல்லி மீட்டு வந்ததாக வரலாறு உண்டு.

ஆர்.கே.எஸ்.அவர்கள் நிதியமைச்சராக இருக்கும் போது, பாராளுமன்றத்தில் வரிவிதிப்புத் தொடர்பான விவாதம் ஒன்றில் இவர் மீது சிலர் விமர்சனம் எழுப்பியதால், இவர் தன்னுடைய நிதியமைச்சர் பதவியை உடனடியாக ராஜினாமா செய்தார். இதனால், இரண்டாண்டு காலம் மட்டுமே இவர் நிதியமைச்ச ராகப் பணிபுரிந்தார்.

**கி.வீரமணி - தலைவர், திராவிடர் கழகம்.**

சர்.ஆர்.கே.சண்முகம் அவர்கள் மத்திய (சென்ட்ரல் லெஜிஸ்லேட்டிவ் அசம்ப்ளி) என்ற அந்தக் காலத்தி லேயே இருக்கக்கூடிய சட்டப்பேரவைக்கு பெயர் பாராளுமன்றம், அதிலேயே அவர் அங்கம் வகித்தவர். பொறுப்பிலே இருந்தவர். சிறந்த பார்லிமென்டே ரியனாக இருந்த, நல்ல ஆற்றல் இவைகளை யெல்லாம் தெரிந்து வைத்திருந்த தேசப்பிதா காந்தி அவர்கள், அவரை சுதந்திர இந்தியாவுடைய முதல் அமைச்சரவை எப்படி இருக்க வேண்டும் என்று சொன்னால், எல்லாரும் கட்சிக்காரர் களாகவும், காங்கிரசுக் காரர்களாகவும் இருக்க வேண்டும் என்ற அவசி யம் இல்லை. காங்கிரசுக்கு எதிரான நிலைப்பாடு உள்ளவர்களும்கூட, அவர்களுடைய அறிவு, திறமை யையும், ஆற்றலையும் பயன்படுத்தி அமைச்சரவை அமைக்க வேண்டும் என்று சொன்னார். அதனடிப் படையில் வந்தவர்கள், டாக்டர் பாபா சாகேப்



**தனது அரசியல் பணிகளுக்கு நிகராக, தமிழின் மீதும் மிகுந்த பற்றுக் கொண்டவராக இருந்தார் ஆர்.கே. எஸ். இவர் நிதி அமைச்சராக இருந்தபோது, தமிழ்க் களஞ்சியம் உருவாக்குவதற்கு நிதி ஒதுக்கித் தந்தார். மேலும் ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றான சிலப்பதிகாரத்திற்கு, எல்லோரும் புரிந்து கொள்ளக் கூடிய வகையில் எளிய தமிழில் உரை எழுதி வெளியிட்டார்.**

அம்பேத்கரும் நிதி அமைச்சர் ஆர்.கே.சண்முகம் அவர்களும்.

அங்கே சில பொறாமைக்காரர்கள், அவரை இருக்க வைத்தால் தங்களுடைய அறிவுக்கும் ஆற்றலுக்கும் மேலே அவர் திகழ்கிறார் என்பதற்காக, ஒரு சூழ்ச்சி செய்த நேரத்தில் அதைக்கண்டு வெறுத்த அவர், தன் மீது தேவையற்ற பழிகளை இவர்கள் சுமத்துகிறார்கள் என்பதற்காக பதவி எனக்கு ஒரு பொருட்டல்ல என்று அவரே இரண்டாண்டுகளில் பதவி விலகி வெளியே வந்து, பொது வாழ்க்கையிலே பல கொள்கையோடு இருக்கக்கூடிய ஒருவராக சிறந்து, உலகத்துக்கே ஆலோசனை சொல்லக்கூடிய நிதி ஆலோசகராக உயர்ந்து நின்றார்.

இந்தியாவின் பல உயர்ந்த பதவிகளை வகித்தவர் ஆர்.கே.எஸ். அப்போதைய பாராளுமன்றத்தில் காங்கிரசு கட்சியின் அரசியல் பிரிவான சுயராஜ்ய கட்சியின் தலைவராக நேருவும் செயலாளராக சித்தரஞ்சன்தாசும் இருந்தபோது, ஆர்.கே.சண்முகம் அவர்கள், சுயராஜ்ய கட்சியின் கொரடாவாகவும் பணியாற்றியுள்ளார். மேலும் இந்திய தேசிய சட்ட சபையின் சபாநாயகராகவும் பணியாற்றியுள்ளர். இதன் மூலம் பாராளுமன்றத்தில் முதல் தமிழ் சபாநாயகர் என்ற பெருமையும் இவருக்கு உண்டு.

சென்னை ராஜ்தானியின் சட்டமன்ற கவுன்சிலுக்கு அவர் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அங்கே இரண்டு ஆண்டுகள் உறுப்பினராக இருந்தார். நீதிக் கட்சியின் உறுப்பினராக இருந்தார். அதற்குப் பின்பு நீதிக்கட்சியிலிருந்து விலகி, சுவராஜ் கட்சியிலே சேர்ந்தார். சுவராஜ் கட்சியில் காங்கிரசுக்காரர்கள் இருந்தார்கள். தேசியவாதிகளும் இருந்தார்கள். காங்கிரசுக்காரர்களுக்கும் அவர்களுக்கும் என்ன வேறுபாடு என்று சொன்னால், காங்கிரசு தேர்தலிலே போட்டியிடக் கூடாது, வெள்ளை நிர்வாகத்தை பகிஷ்கரிக்க வேண்டும் என்பது காங்கிரசிடமிருந்த கொள்கை.

ஆனால் சுவராஜ் கட்சியினர், நாம் வெளியே இருந்துவிட்டால் வெள்ளையர்களுடைய ஆதிக்கம் அதிகமாகிவிடும். ஆகவே சட்டமன்றத்திற்குச் சென்று நாம் போராட வேண்டும். அங்கே இருக்கின்ற நட்டங்களை விமர்சிக்க வேண்டும். நம் மக்களுக்கு ஆதரவான நிலையை நாம் எடுக்க வேண்டும் என்பதற்காக, சட்டமன்றத்திற்குப் போக வேண்டும் என்ற கொள்கையில் இருந்தார்கள். அந்த சுவராஜ் கட்சியிலே பெரிய பெரிய தலைவர்கள் எல்லாம் இருந்தார்கள். அந்த சுவராஜ் கட்சியின் சார்பாக ஆர்.கே.சண்முகம் சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1931ஆம் ஆண்டு முதல் 1945ஆம் ஆண்டு வரை கொச்சி அரசின் திவானாக பணியாற்றியுள்ளார். இந்தக் காலகட்டத்தில் அங்கு அனைத்துத் துறை களிலும் நிர்வாக சீர்திருத்தத்தை மேற்கொண்டார். கொச்சி அரசின் தலைமையகம் இவரின் பெருமுயற் சியாலேயே நவீனப்படுத்தப்பட்டது.

கொச்சி திவான் என்பது அந்த ஊருக்கு பிரதம மந்திரி போன்றதாகும். அந்த ஊருக்கு பிரதம மந்திரியாக இருந்து நிர்வாக வேலை அனைத்தையும் பார்த்தார். கொச்சினில் ஒரு உயர்நிதிமன்றம் உருவானதற்குக் காரணமாக இருந்தார். கொச்சின் உயர்நீதிமன்றமே, அவர் இருக்கும் சமயத்தில் வந்தது. அதனால் தான் இன்றும்கூட திருவனந்தபுரத்தில் உயர்நீதிமன்றம் கிடையாது. கொச்சினில்தான் உயர்நீதிமன்றம் உள்ளது. அதற்கு முக்கியக் காரணம் ஆர்.கே.சண்முகம் செட்டியார்தான்.

ஆர்.கே.எஸ்.அவர்கள் இந்தியாவின் நிதியமைச்சராக ஆவதற்கு முன்பே, பொரளாதாரம் தொடர்பாக பல்வேறு நாடுகளில் நிகழ்வுகளில் பங்கேற்றள்ளார் 1929ஆம் ஆண்டு பன்னாட்டு தொழிலாளர் மாநாட்டில், இந்தியப் பிரதிநிதியாக கலந்து கொண்ட ஆர்.கே.எஸ். அவர்கள், 1038ஆம் ஆண்டு ஜெனிவாவில் நடந்த பன்னாடுகள் சங்கக் கூட்டத்திற்கும் இந்தியாவின் பிரதிநிதியாகச் சென்று வந்தார். மேலும் 1944ஆம் ஆண்டு நடந்த 'பிரிட்டன் வுட்ஸ் உலக நாணய மாநாட்டிலும்' இந்தியாவின் சார்பாக பங்கு பெற்றார். இந்த மாதிரியான பயணங்களின் மூலம், தனது உலகளாவிய பொருளாதார அறிவினை வளர்த்துக் கொண்டார்..

1892ஆம் ஆண்டு பதினேழாம் நாள் பிறந்த ஆர்.கே.சண்முகம் அவர்கள், தனது பள்ளிக்கல்வியை கோவையில் உள்ள யூனியன் பள்ளியிலும், பிறகு தனது

கல்லூரிப் படிப்புகளை சென்னை கிறித்தவக் கல்லூரியிலும், சட்டக்கல்லூரியிலும் படித்தார். கல்லூரிப் படிப்புகளுக்குப் பிறகு, மிக குறுகிய காலத்தில் அரசியல் பொது வாழ்க்கையில் அடியெடுத்து வைத்த இவர், ஆரம்ப காலங்களில் நீதிக் கட்சியின் சார்பில் கோவை நகர மன்ற உறுப்பினரா கவும், நகரமன்ற துணைத் தலைவராகவும் பணியாற்றி னார்.

காந்தியார் அவர்கள் தமிழகத்தில் சுற்றுப்பிர யா ணம் செய்தபோது, கோவைக்கு வந்திருந்தார். அப்போது ஆர்.கே.சண்முகம் வீட்டில் தங்கினார். காந்தியார் அவர்களின் சுற்றுப்பயணத்திற்கு உறு துணையாக இருந்த ஆர்.கேஎஸ் அவர்கள், காந்தியார் தமிழகத்திலிருந்து கிளம்பும்போது அவருடைய கையெழுத்தை தன்னுடைய ஆட்டோகிராப் புத்தகத் தில் கேட்டார். காந்தியார், “நீ எனக்கு ஒரு வாக்குறுதி அளித்தால் நான் உனக்கு கையெழுத்திடுகிறேன்“ என்கிறார். “என்ன வாக்குறுதி என்று சொல்லுங்கள் முடிந்தால் செய்கிறேன்“ என்றார் ஆர்.கே.எஸ். காந்தி சொல்கிறார், “நீ தினந்தோறும் ஒரு மணி நேரம், கைராட்டையில் நூல் நூற்பேன் என்று எனக்கு வாக்குறுதி அளிக்க வேண்டும். அப்படி நீ செய்தால், செய்வதாகச் சொன்னால், நான் உனக்கு கையெழுத்திடுகிறேன்“ என்று கூற, சற்றும் யோசிக் காமல் ஆர்.கே.எஸ். அவர்கள் அந்த இடத்திலேயே சொன்னார்: “என்னால் அது முடியாது. ஏனென்றால், அதில் எனக்கு ஈடுபாடு இல்லை, என்னால் அது இயலவும் இயலாது“ என்றார். உடனே காந்தியார், சிரித்துக் கொண்டே, “நீ எனக்கு எந்தப் பொருளும் தரவேண்டாம். நீ உண்மையைச் சொன்னதாலேயே அந்த உண்மையின் விலையாக, நான் கையெழுத்திடுகிறேன்“ என்று கையெழுத் திட்டுத் தந்தார். இதுதான் காந்தியார்க்கு ஆர்.கே.எஸ். மீது மிகுந்த நம்பிக்கையையும் அன்பையும் ஏற்படுத்தியது.

மகாத்மா காந்தி, ஜவகர்லால் நேரு போன்ற தேசியத் தலைவர்களுடன நல்ல நட்புறவை பேணிக் காத்தது போலவே, பெரியார், இராசாசி, அண்ணா போன்ற தமிழகத் தலைவர்களுடன் நல்ல நட்புறவோடு இருந்து வந்தார்.

ஆர்.கே.சண்முகம் அவர்கள் பொது வாழ்க்கை யைத் தொடங்கிய நேரத்திலே, தந்தை பெரியாருடைய சுயமரியாதை இயக்கத்தில் தொடர்புடையவர்களாக இருந்தார்கள். பிறகு அவர்கள் மற்ற அமைப்புகளுக்கு சென்றாலும் கூட, பெரிய பதவிகளையெல்லாம் வைத்துக் கொள்ளும் அளவுக்கு ஆற்றல் படைத்தவ ராகத் திகழ்ந்தார்.

“கடைசியிலே எனக்கு ஒரு பெரிய வாய்ப்பு என்னவென்றால், நான் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே ஆனர்ஸ் வகுப்பு (பொருளாதாரம்) படிப்பு படிக்கிறபோது எனக்கு அவர் துணைவேந்தர். எல்லாவற்றிலும் அவர்கள் சரியாக இருப்பார்கள். ஒரு நிகழ்ச்சி ஐந்து மணிக்குத் தொடங்குகிறது என்றால், பல்கலைக்கழகத்திற்குள் சரியாக 4.59க்கும் வரமாட் டார், 5.01க்கும் வரமாட்டார். சரியாக ஐந்து மணி என்றால் துணைவேந்தருடைய அந்தக் கார் வந்து நிற்கும். அந்த நிகழ்ச்சிக்கு இறங்கிப் போவார். இதை அவருடைய மாணவன் என்ற முறையிலே பார்த்து நாங்கள் எல்லோரும் வியந்ததண்டு. காலத்தை மதிக்க வேண்டும், எதையும் குறிப்பிட்ட காலத்தில் செய்ய வேண்டும், திட்டமிட்டுச் செயல்பட வேண்டும் என்று சொல்வார்“ என்கிறார் கி.வீரமணி.

தனது அரசியல் பணிகளுக்கு நிகராக, தமிழின் மீதும் மிகுந்த பற்றுக் கொண்டவராக இருந்தார் ஆர்.கே. எஸ். இவர் நிதி அமைச்சராக இருந்தபோது, தமிழ்க் களஞ்சியம் உருவாக்குவதற்கு நிதி ஒதுக்கித் தந்தார். மேலும் ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றான சிலப்பதிகாரத்திற்கு, எல்லோரும் புரிந்து கொள்ளக் கூடிய வகையில் எளிய தமிழில் உரை எழுதி வெளி யிட்டார்.

அண்ணாமலை பல்கலைக்கழகத்தினுடைய துணைவேந்தராகப் பணியாற்றினார். அவர் துணை வேந்தராகப் பணியாற்றிய காலத்தில்தான், அண்ணா மலைப் பல்கலைக்கழகம் இதுவரை வெளியிட்ட பல்வேறு வெளியீடுகளிலே சிறப்பானதாக கருதப்படு கிற “கம்பராமாயணப் பதிப்பு.“ அன்று வாழ்ந்த ரா.பி.சேதுப்பிள்ளையிலிருந்து, கி.வா.ஜகநாதனி லிருந்து ஔவை துரைசாமி போன்ற எல்லாரும், ஒரு குழுவை அமைத்து, ஒரு மிகப்பரிய தமிழறிஞர்களு டைய

**தொழில் வளர்ச்சியில் மிகுந்த ஆர்வம் கொண்ட ஆர்.கே.எஸ் அவர்கள் இந்தியாவிலும், தமிழகத்திலும், தொழில் வளர்ச்சியை மேம்படுத்தும் விதமாக பல்வேறு முயற்சிகளைச் செய்தார். 1943ஆம் ஆண்டு தொழி லாய்வு நிலைக் குழுவில் தலைவராக செயல்பட்ட போது, இவர் தலைமையிலான அந்தக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், அறிவியல் மற்றும் தொழிலக ஆய்வுக் குழுவின் கீழ் இந்தியா முழுவதும் 32 தேசிய ஆய்வகங்கள் நிறுவப்பட்டன.**

குழுவினாலே கம்பராமாணத்துடைய திருத்திய பதிப்பை வெளிக்கொணர்வதற்கான ஒரு திட்டத்தை வகுத்துக் கொடுத்தார். இன்று கம்பராமயணம் பதிப்புகளிலேயே மிகச்சிறப்பான பதிப்பு என்று சொன்னால், அண்ணாமலை துணைவேந்தார் ஆர்.கே.எஸ். வெளியிட்ட கம்பராமாயணப் பதிப்பு தான்.

தமிழ் இலக்கியத்தில் ஆர்வம் மட்டுமல்ல, தமிழ் இசையில் அவருக்கு மிகப்பெரிய அனுபவம் உண்டு. மிகப்பெரிய ஒரு வாய்ப்பாக அவர் ஒரு அனுபவத்தைப் பதிவு செய்திருக்கிறார். "ஜெர்மனியிலே நான் இருந்த தேன். அப்பொழுது தமிழ் இசை இயக்கம் வெற்றி பெற்றுவிட்டது என்று ஒரு தந்தி கொடுத்தார்கள். இதைக் கேட்ட உடனே நான் ரொம்ப மகிழ்ச்சியாக கைதட்டினேன். நான் ரொம்ப மகிழ்ச்சியாக இருந்த உடனே, பக்கத்திலிருந்த செருமானிய மாணவர் ஒரு கேள்வி கேட்டார். என்னவென்று சொன்னால் "நீங்கள் இவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறீர்கள், என்ன செய்தி உங்களுக்கு வந்தது?" "என்னுடைய நாட்டிலே இருந்து ஒரு நல்ல தகவல் வந்திருக்கிறது. நாங்கள் எல்லாம், தமிழிசை இயக்கம் ஒன்று நடத்தினோம். அதன் நோக்கம் என்னவென்றால், இசைக் கச்சேரி களில் தமிழில் பாட வேண்டும் என்பதுதான். அந்த இயக்கம் வெற்றி பெற வேண்டும் என்பதற்காக நாங்கள் அரும்பாடு பட்டுக் கொண்டிருந்தோம். அது கொள்கையளவிலே ஒப்புக் கொள்ளப்பட்டு, அது இன்று வெற்றி பெற்றிருக்கிறது" என்ற செய்தியைத் தான் நண்பர்கள் எனக்கு தந்தி மூலம் இங்கே இந்த நாட்டுக்கு அனுப்பியிருக்கிறார்கள். நான் இங்கே வந்திருக்கிறபோது, அதைக் கேட்டு, அவ்வளவு மகிழ்ச்சி என்றேன்." அதற்கு அவர் "நீங்கள் தமிழ்நாட் டி லிருந்து தானே வரகிறீர்கள், அப்போ தமிழ் நாட்டில் தமிழ்ப்பாட்டுதானே இருக்க வேண்டும். இதுவரை நீங்கள் தமிழில் பாட்டுப் பாடவில்லையா? பின்னர் எந்த மொழியிலே பாடிக் கொண்டிருந்தீர்கள்" என்று செருமானிய நண்பர் திருப்பி என்னைப் பார்த்துக் கேட்டார். நான் வெட்கத்தால் தலைகுனிந் தேன்" என்று ஆர்.கே.எஸ். அவர்கள் சொல்லியிருக்கி றார்.

தொழில் வளர்ச்சியில் மிகுந்த ஆர்வம் கொண்ட ஆர்.கே.எஸ் அவர்கள் இந்தியாவிலும், தமிழகத்திலும், தொழில் வளர்ச்சியை மேம்படுத்தும் விதமாக பல்வேறு முயற்சிகளைச் செய்தார். 1943ஆம் ஆண்டு தொழி லாய்வு நிலைக் குழுவில் தலைவராக செயல்பட்ட போது, இவர் தலைமையிலான அந்தக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், அறிவியல் மற்றும் தொழிலக ஆய்வுக் குழுவின் கீழ் இந்தியா முழுவதும் 32 தேசிய ஆய்வகங்கள் நிறுவப்பட்டன.

சண்முகம் செட்டியார் அவர்கள் மாநில உரிமை களுக்காகப் பேசி இருக்கிறார். பாராளமன்றத்தில், "மாநிலத் துக்கு இன்னும் அதிகாரம் தேவை இருக்கிறது. எல்லா அதிகாரமும் மைய அரசிடம் இருக்கக்கூடாது" என்று, மாநில அதிகாரத்தின் பங்கீட்டை பாராளுமன்ற டிபேட்டில் பேசி இருக்கிறார்.

1950ஆம் ஆண்டு சென்னை மாகணத்தை தொழில் மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட, சென்னை தொழில் முதலீட்டுக் கழகம் எனப்படும் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் தலைவராகவும் பணி யாற்றியுள்ளார். மேலும் இந்தியாவில் உள்ள ஆசியக் கண்டத்தின் மிகப்பெரிய தேசிய செய்தித்தாள் மற்றும் காகித ஆலையின் செயல்த் தலைவராகவும் பணியாற்றிய பெருமை ஆர்.கே.எஸ். அவர்களுக்கு உண்டு.

'சேம்பர் ஆஃப் காமர்ஸ்' தொழில் முனைவோர் சங்கம் இவற்றில் எல்லாம் முனைப்பாகச் சென்று செயல் பட்டு தமிழகத்தின் பிரதிநிதியாக வியன்னாவிற்கும் ஜெனிவாவிற்கும் வேறு பல நாடுகளுக்கும் சென்று பேசினார். இவர், அங்கு சென்று தொழில் சார்பாக பேசிய கொள்கைகளும், உழைப்பாளிகளுடைய பிரச்சனைகளை எடுத்து வைத்து பேசியதையும் பார்த்து அதிசயித்தவர்கள், "இவர் பொருளாதாரத்தில் மிகப் பெரிய ஆளுமை படைத்தவர்" என்று ஒப்புக் கொண் டார்கள்.

அரசியல் தலைமையில் ஆராய்ந்து பார்த்தால் பல விதமான தலைவர்கள், பலவிதமான காலகட்டங் களிலே அறிமுகம் ஆனதைப் பார்த்தேன். மக்கள் தலைவராக எழுந்து, மக்கள் போராட்டங்களில் ஈடுபட்டு, மக்களுடைய குரலை மக்கள் மன்றங்களில் சொல்லி வளர்ந்தவர்கள் சிலர். சிலர் தங்கள் அறிவால், திறமையால், சாதுர்யத்தால் அவர்கள் அங்கீகரிக்கப் பட்டுத் தலைவர் ஆனவர்கள். சிலர் சந்தர்ப்ப வசத்தி னாலே மற்றவர்களுக்கு மாற்றாக நிறுத்தப்பட்டு தலைவர் ஆனவர்கள். இதில், சண்முகம் செட்டியாரை எந்த ரகத்தில் சொல்ல வேண்டும் என்று சொன்னால், அறிவால், தனது அறிவின் சாதுரியத்தால், செயற்கரிய செயல்களைச் செய்தவர். அழகான ஆங்கிலமும் அவரிடம் இருந்தது. மக்களிடம் தொடர்பும் இருந்தது. மக்களின் தொடர்பு என்றால், இன்றையது போல சாதாரண மக்கள் என்று சொல்ல முடியாது. அந்த மேட்டுக்குடி மக்கள் தொடர்பும், பிரிட்டிசு வைஸ்ராய் போன்ற தொடர்பும் இருந்த காரணத்தினாலே மேல்மட்ட தலைவைர்களிலே முக்கியமானவரானார் சண்முகம் செட்டியார்.

இப்படி இந்திய நாட்டின் வளர்ச்சியிலும், தான் பிறந்த தமிழகத்தின் வளர்ச்சியிலும், மாறாத அக்கரை கொண்டு செயலாற்றி, அழியாத புகழோடு இந்திய அரசியல் வரலாறில் எப்போதும் நினைவுகூரத்தக்க தலைவராக இருக்கிறார் ஆர்.கே.எஸ்.

நன்றி : **சோழநாச்சியார்.**


Owned, Published and Printed by **V. Thalapathi,** Published from No. 13/5 Buddha Street, Rangarajapuram, Kodambakkam, Chennai - 24. and Printed at **DESIGNS PARK,** No. 22 Weavers Street Triplicane, Chennai-5, Editor: **V. THALAPATHI.**







**திருவள்ளூர் ரோட்டரி கிளப்பின் துணைத்தலைவர் திருமதி.சாராசெல்லக்குமார் அவர்கள், கொரோனா தடுப்பு உதவிகளை பொதுமக்களுக்கு வழங்கினார். உடன், ரோட்டரி கிளப்பின் உறுப்பினர்கள், நிருவாகிகள்.**

MUTRAM - Tamil & English Monthly RNI No. TNBIL/2010/36924.


பன்மை வெளி

2020 புதிய வெளியீடுகள்




இன்னும் பல்வேறு நூல்கள்...

தொடர்புக்கு: 044 24742911 / 98408 48594 / 94439 18095